Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (02.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 367

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/940)




இரண்டு சாதனைகள் முறியடித்தார்

06



தமிழ் தாயின் மடியிலேயே...

12



யாழில் பழங்களுக்கு மருந்து

09




சம்பந்தனின் கலாநிதிப் பட்டம்...

14

# பொதுநலவாய மாநாட்டில் ஆணைக்குழு அறிக்கை?

**இம்மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப் படலாம் என எதிர்பார்ப்பதாக பொதுநலவாய அமைப்பின் அரசியல் விவகாரப் பணிப்பாளர் அமிதவ் பானர்ஜி தெரிவித்துள்ளார்.**



இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள பி.ரி.ஐ. செய்தி நிறுவனம், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு உதவ பொதுநலவாய அமைப்பு முன்வந்துள்ளதாக அமிதவ் பானர்ஜி கூறியுள்ளதாக தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையை அடுத்த மாதம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இவ்வறிக்கை அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டிலும் சமர்ப்பிக்கப் படலாம் என அமிதவ் பானர்ஜி தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்தும் தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்படுமா என இவரிடம் கேட்டபோது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த சுற்று பேச்சு நாளை ஆரம்பம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சு நாளை திங்கட்கிழமை மாலை இடம்பெறும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

பேச்சின்போது எந்தவகையான அரசியல் தீர்வு என்பது தொடர்பான தமது இறுதி நிலைப பாட்டை அரசாங்கம் அறிவிக்கும் என எதிர்ப்பார்ப்பதாக, மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நாளைய பேச்சில் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவிருப்பதாக அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா ஊடக வியலாளர்களிடம் கூறியுள்ளார்.

## புலிகளின் சரணடைவு குறித்து வெளியாகவுள்ள இரகசியம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடையப் போவதாக விடுத்திருந்த அறிவித்தல் களமுனைக்குக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே அவர்கள் யுத்தத்தின்போது கொல்லப்பட்டக் காரணமாக அமைந்து விட்டதாக அரசாங்கத்தின் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. தருஸ்மன் அறிக்கை மற்றும் சனல 4 காணொளி என்பவற்றுக்குப் பதில்ளிக்கும் வகையில் அரசாங்கம் தயாரிக்கும் இரண்டு அறிககைகளில் ஒன்றிலேயே பிரஸ்தாப விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் சரணடையும் விடயம் மே 17 ஆம் திகதி நண்பகலே ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக இருந்த பசில் ராஜபக்ஷவுக்கு கிடைத்திருந்தது.

ஆயினும் களமுனையில் யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், அத்தகவல் உரிய நேரத்தில் களமுனையின் கட்டளை அதிகாரிகளைச் சென்றடையவில்லை. அதன் காரணமாகவே மோதலின்போது விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் வன்னி யுத்த காலகட்டத்தில்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கம்பம் விழுந்து இளைஞர் துடிதுடித்துப் பலி

(சுழிபுரம்)

மின்சாரக் கம்பத்தை நிறுத்தும் வேளை, அது தவறுதலாக வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று பண்ணாகம் பல்லசுட்டிப் பகுதியில் இடம்பெற்றது. நேற்றிரவு ஏழு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஜெயானந்தம் - கயஜீவன் (வயது - 22) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பல்லசுட்டி கிராமத்திற்கு மின் இணைப்பினை வழங்கும் நோக்கில் நேற்றிரவு ஏழு மணியளவில் மின்சாரசபை ஊழியர்கள் ஐவர் மின தூண்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டனர். இவர்களின் செயற்பாட்டிற்கு ஊர் மக்களும் தமது ஒத்துழைப்பினை (15 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நகை திருடியவர் வவுனியாவில் சிக்கினார்

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியின் வீடொன்றில் கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் திகதி சுமார் 65 பவுண் நகைகளையும், பொருட்களையும் கள்வாடிய கும்பலைச் சேர்ந்த திருடனை வவுனியாவில் வைத்து யாழிலிருந்து சென்ற விசேட பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தத் திருட்டுக் கும்பலைப் பிடிப்பதற்காக விசேட பொலிஸ் குழுக்களை நியமித்து 8 மாதங்களாக வலைவீசியிருந்த யாழ்ப்பாண பொலிஸார், வவுனியாவில் இந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த வாரம் கைதுசெய்துள்ளனர்.

இவர் மூலம் பெறப்பட்ட தகவல்களின் படி, இந்தத் திருட்டுடன் தொடர்புடைய மேலும் இருவரும் அடையாளம் காணப் பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மூலம தெரியவருகிறது. இந்தக் கும்பலைச் சேர்ந்த மூவரும், யாழ் கஸ்தூரியார் வீதி, ஐந்து சந்தி மற்றும் குருநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

திருட்டுடன் சம்பந்தப்பட்ட ஏனைய இருவரும் வேறு திருட்டு மற்றும் சட்ட விரோத குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தற்போது யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்களிடம் இந்தத் திருட்டுக் குறித்து விசாரிப்பதற்காக நீதிமன்றத்தின் அனுமதியை பொலிஸார் கோரவிருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. களவாடப்பட்ட 65 பவுன் நகைகளும் வங்கியொன்றில் அடகு வைக்கப்பட்டு 16 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறப்பட்டிருப்பதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளபோதும், எந்த வங்கியில் நகைகள் அடகு வைக்கப்பட்டது என்ற விபரம் இன்னமும் தெரியவரவில்லை என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

## உள்நாட்டு அரசியல் இலாபத்திற்காக இலங்கையைப் பலிக்கடா ஆக்காதீர்



(கொழும்பு)

உள்நாட்டு அரசியல் இலாபங்களுக்காக கனடா, இலங்கையை பலிக்கடவாக்கக கூடாது என ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

கனேடிய வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து, இலங்கைக்கு எதிரான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

உள்நாட்டு அரசியல் நலன்களை இவ்வாறு சர்வதேச ரீதியில் பிறிதொரு நாடடின் மீது குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிராக உலக நாடுகள் அழுத்தங்களை பிரயோகித்து வருவதனைப் பயன்படுத்திப் புலி ஆதரவு அமைப்புக்கள் நிதி திரட்டல் நடவடிககைகளில் தீவிர முனைப்புக் காட்டிவருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களைத் தடுப்பதற்கு பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியாவின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது

## பயனாளிகள் தெரிவு தாமதம் வீட்டுத்திட்டப் பணிகள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீடமைப்புத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றது. ஐ.ஓ.எம்.நிறுவனத்தின் வீட்டுத் திட்டத்திற்குப் பிரதேச செயலர் பிரிவுகளினால் பயனாளிகள் தெரிவு ,செய்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக வீடுகளை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதன் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நேற்று முற்பகல் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் வீட்டுத்திட்டம் சம்பந்தமான விசேட கலந்துரையாடலிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# பனை தென்னைவள சங்கப் பணியாளர்களுக்கு 5 இலட்சம் பெறுமதியான வீடுகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் அமைக்கப்பட்ட தலா 5 இலட்சம் பெறுதியான 4 வீடுகள் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டன.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் சுண்டுக்குளியில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் இடம்பெற்ற 89ஆவது சர்வதேச கூட்டுறவு தினக் கொண்டாட்டங்களின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவற்றை வழங்கி வைத்தார்.


மேலும், 2009, 2010 ஆம் ஆண்டுகளில் சிறந்த அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 34 பேருக்கு தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன், 2009, 2010 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

பனை, தென்னை வளங்களை நம்பி வாழும் மக்களின் வாழ்வை வளர்த்தெடுப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் தொடர்ந்தும் முழுமையான பங்களிப்பு வழங்கப்படும் என உறுதியளித்தார். இந்நிகழ்வில், பனை அபிவிருத்திச்சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் இ.இராஜாராம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மற்றும் 23 சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட சங்கத்தின் அங்கத்தவர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (எஸ்)

# கொக்கிளாய் பாடசாலைக்கான கட்டடப் பணிகள் மந்த கதியில்



(கொக்கிளாய்)

கொக்கிளாய் அ.த.க. பாடசாலைக்கான கட்டடம் அமைக்கும் பணி மந்த கதியில் நடைபெற்று வருவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிரந்தரக் கட்டட வசதியின்றி தற்காலிக கொட்டகையில் இயங்கி வரும் கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் நிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நாட்டப்பட்டது. இன்றுவரை அத்திவாரக் கட்டுக்கு அப்பால் கட்டட வேலைகள் ஆரம்பிக்கவில்லை எனப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையைக் கருத்தில் கொண்டு கட்டடப் பணியினைத் தொடர்ந்து ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (17)

# அனுமதிப் பத்திரமின்றிய சாராய விற்பனை மூவர் கைது

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தில் அனுமதி பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபர்கள் மூவர் கடந்த வியாழக்கிழமை யாழ்.மதுவரி நிலைய பரிசோதகரால் பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி ஜோய் மகிழ் மகா தேவா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு இணங்க முதல் தடவை விற்பனை செய்த நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் தடவை விற்பனை செய்த நபருக்கு 15 ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (எஸ்)

# உலக மதுவிலக்கு தினம் நாளை அனுஷ்டிப்பு

உலக மது விலக்கு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.அன்றைய தினம் மது விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என மதுவரி திணைக்கள அதிகாரி எஸ். கிருபாகரன் அறிவித்துள் ளார்.

அன்றைய தினம் மூடப்படாமல் இருக்கும் விற்பனை நிலையங்கள், மறைமுகமாக விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் அறிவித்துள்ளார்.(எஸ்)

# பன்றியால் தாக்குண்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

(தென்மராட்சி)

பளைப் பகுதியில் கடந்த வாரம் பன்றி தாக்கியதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் பகுதியைச்சேர்ந்த சந்திரகுமார் (வயது-36)என்ற குடும்பஸ்தரே நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்துள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் இரு குழந்தைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எஸ்)

# மர்மத் தேள் கடித்து வயோதிபப் பெண் காயம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தைச் சேர்ந்த குட்டிகர் செல்வி (வயது-74) என்ற வயோதிபப்பெண் மட்டைத்தேள் தீண்டி நேற்று இரவு 10.00 மணியவில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நித்திரையில் இருந்த இப்பெண்ணுக்கு "திருநீலகண்டன்" என்று அழைக்கப்படும் ஒருவகை தேள் இனம் கூரையில் இருந்து விழுந்து, காலில் தீண்டியது. (எப்.எஸ்)

# அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் விபத்து ஒன்றில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய வயோதிபர் வீட்டிலிருந்து அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு பொலிஸாரினால் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பண்டத்தரிப்பு சில்லாலை தெற்கைச் சேர்ந்த நாகையா கனகையா (வயது-74) என்பவராவார். இவரது சடலம் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# சிறுவனுக்கு வினையான நாவல் பழம்

(யாழ்ப்பாணம்)

நாவல் மரத்தில் நாவல் பழம் பிடுங்க ஏறிய சிறுவன் மரத்திலிருந்து விழுந்து படுகாயமுற்றதுடன், சுயநினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளைப் பகுதியைச் சேர்ந்த விதுஷன் (வயது-9) என்ற சிறுவனே சுயநினைவிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

# யாழ்ப்பாணத்தில் இன்று ரி.எம்.கிருஸ்ணா கச்சேரி



இந்தியப் பிரபல கர்நாடக இசைக்கலைஞர் ரி.எம். கிருஸ்ணா மற்றும் அவரது குழுவினரது இசைக்கச்சேரி இன்று மாலை 5.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வை வடமாகாண கல்வி, கலாசார அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும் யாழ் இந்திய தூதரகமும் இணைந்து வடக்கில் மூன்று மாவட்டங்களில் நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

யாழ்ப்பாணத்தில்...

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், இந்தியத் துணைத்தூதர் வி. மகாலிங்கம் மற்றும் யாழ் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா கௌரவ .விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சியில்...

இந்திய துணைத்தூதரக அதிகாரி கே.ரகுராம் தலைமையில் நாளை மாலை 5.00 மணியளவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், கௌரவ விருந்தினராகவும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியாவில்

வடமாகாண கல்வி, கலாசார அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோ[illegible] தலைமையில் வவுனியா நகரமண்டபத்தில் நாளை மறுதினம் மாலை 5.00 மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினராக வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்து கொள்வார்.

கர்நாடக இசைப் பாடகர் ரி.எம்.கிருஸ்ணா கர்நாடக இசைத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்று திகழ்கின்றார். கர்நாடக இசைக் குடும்பத்தில் பிறந்து, அந்த சூழலில் வளர்ந்ததோடு மட்டுமல்லாது தனது சிறுவயதிலேயே சீதாராம சர்மா அவர்களிடம் இசையினை முறைப்படி பயின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு, தனு ஆட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் "சின்னச் சின்ன கைகள்" என்னும் சித்திரக் கண்காட்சி மாணவன் பாலச்சந்திரன் அபிராம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைக்கழக விரிவுரையாளர் ஓவியர் வை.சிவசுப்பிரமணியம் (ரமணி) கண்காட்சியை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் மற்றும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஓவியங்களை சிறுவர்கள் பார்வையிடுவதையும் காணலாம். (படம் : பா.சிகான்)

அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழ வேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங் களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நம்ப வைக்கும் ஏமாற்று!

ஐ.நா. போர்க்குற்ற விசாரணை, சனல்–4 காணொளி, ஜெயலலிதா சட்டசபைத் தீர்மானம், மனித உரிமைப் பேரவையில் தருஸ்மன் அறிக்கை, அவுஸ்ரேலியாவில் இலங்கைக்கெதிரான பிரேரணை, றொபேட் ஓ பிளேக்கின் சில நாள் மீட்பர் வேசம், கனடிய அரசின் பொதுநலவாயப் போர்க் கொடி..... என சமீப காலத்தில் நாம் பிடித்துத் தொங்கிய நம்பிக்கைக் கயிறுகளெல்லாம் நம்மைக் கைவிட்டபோதும் நாம் அடுத்த ஊஞ்சல் கயிறு தேடுவதை நிறுத்துவதாயில்லை.

தரைக்கு இறங்கி வந்து, நம் பிரச்சினைத் தீர்வுக்கு நாமே என்ன முயற்சிகள் செய்யலாம் என்பது பற்றி நம் ஊடகங்களும், வசன வீரர்களும் பேசவோ சிந்திக்கவோ மறுத்து வருகிறார்கள். உலகத்திலுள்ள எந்தெந்த "மலைமுழுங்கி"களெல்லாம் இலங்கை அரசுக்கு மிரட்டல் விடுகிறார்கள் என்று பார்த்து, அதிலேயே புளகாங்கிதப்பட்டு, நாம் சும்மாயிருக்கவே தீர்வு கையில் வந்து விழுவதற்கான நிலைமை கனிந்து வருவதாக எழுதிப் புளுகிக்கொண்டிருக்கிறோம்.

இப்போது "இலங்கை அரசை அடியோடு கைகழுவுகிறது இந்தியா" என்பதில் வந்து நிற்கிறோம். அதாவது , இலங்கையின் எந்த ஓர் உள விவகாரத்திலும் இந்தியா தலையிடமாட்டாது. இலங்கையில் உள்ள பிரச்சினைகளை இலங்கை அரசாங்கமே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டார் என்பதற்குச் சந்தோஷப்படும் பாமரர்களாக நாமிருக்கிறோம்!

இந்தியா காலங்காலமாக இதைத்தான் கூறிவருகிறது. இலங்கை அரசிடம் மட்டுமில்லை, இலங்கைத் தமிழர்களிடமும் அதையேதான் சொல்லிக்கொண்டிருக்கிறது. அரசுடன் பேசித் தீர்வைக் காணுங்கள்; நாம் தலையிட முடியாது என்றே படித்துப் படித்துக் கூறிவருகிறது. இந்தியா மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்துமே இதைத்தான் சொல்லி வருகின்றன.

சிங்களப் பெரும்பான்மை மக்களும், இந்தத் தீவில் சிறுபான்மையினராக உள்ள தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றுமுள்ள எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு தீர்வுத்திட்டத்திற்காகப் பேசுங்கள், உங்கள் நாட்டுக்குச் சாத்தியமாகக் கூடிய ஒரு தீர்வினைக் கண்டு கொள்ளுங்கள் என்றே அவை சொல்லி வருகின்றன. நாம்தான் இது கேளாதது போல நடித்து வருகிறோம்.

பேச்சில் நமக்கு நம்பிக்கையில்லை; பெரும்பான்மையின அரசாங்கத்துடன் பேசித் தீர்வு காண முடியாதென்பதை சர்வதேசத்திற்கு நிரூபிப்பதற்காகவே ஒப்புக்குப் பேசப் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதே தமிழ்மக்களால் அதிகப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து விடப்பட்டவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்த நாட்டில், சிங்கள மக்களுக்குள்ளேயிருந்து கணிசமானளவு ஆதரவையேனும் பெற்றுக் கொள்ளாமல் தீர்வு வருவது சாத்தியமில்லை; வந்தாலும் நிலைத்திருப்பது சாத்தியமில்லை என்ற யதார்த்தத்தையே உலக நாடுகள் உணர்த்த முற்பட்டு வருகின்றன. அதற்கான, சாத்தியபூர்வ அணுகுமுறைகளுடனான பேச்சுக்கே அவை வலியுறுத்தி வருகின்றன.

தீர்வொன்று வருவதில் கிஞ்சித்தும் விருப்பமில்லாத தமிழ்ப் பிரதிநிதிகளும் ஊடகங்களும் சர்வதேசம் சொல்வதைப் புரிந்துகொள்ளாதது போல் நடித்து மக்களுக்கு வேறு போக்குக் காட்டி வருகின்றன. வாக்குகளுக்காக இவர்கள் வளர்த்து விட்டிருக்கும் தமிழ்த் தீவிரவாதமும், புலம்பெயர் தமிழர் பலரின் தனிநாட்டுக் கனவுக்கொழுப்பும் இவர்களைக் கட்டிப் போட்டிருக்கின்றன. தீர்வென்று எதைப் பேசப் போனாலும் இவர்களது வாக்கு வங்கி உடைந்துவிடும் என்கிற தீவிரவாத முற்றுகைக்குள் சிக்குப்பட்டிருக்கிறார்கள்.

எனவேதான் இவர்கள், "பேசுவதில் பயனில்லை என்று நிரூபிக்கவே பேசப் போய்க்கொண்டிருப்பதாக" தொடர்ந்து நாடகமாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் தீவிரமாக எதிர்க்கும்படியாக, ஒரு தீர்வை வைக்கச் சொல்லி எந்த நாடும் இலங்கையை நிர்ப்பந்திக்கப் போவதில்லை என்கிற உண்மையை இவர்கள் வெளியே சொல்லாமல் மறைத்து "காலம் கனிகிறது" என்றே கன காலமாக விளையாட்டுக் காட்டி வருகிறார்கள்.

இந்தியாவோ சர்வதேசமோ பேசி ஒரு தீர்வைக் காணும்படி வலியுறுத்துவது தவிர வேறெந்த அதிசயங்களையும் இங்கு உருவாக்க வருவார்கள் என்று நம்புவதும் நம்ப வைப்பதும் வெறும் ஏமாற்றே.

– ஆசிரியர்

# யாழ்.தனியார் சாரதி, நடத்துனர்களுக்கு போக்குவரத்து ஆணைக்குழு சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தனியார் பயணிகள் வாகன சாரதிகள் மற்றும் நடத்துனர்களில் ஒரு தொகுதியினருக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை என்பவற்றைப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கினார்.

நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ். செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். மாவட்டத் தனியார் பயணிகள் வாகன ஓட்டுனர் மற்றும் நடத்துனர்கள் உட்பட சுமார் 194 பேருக்கு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவற்றைச் சம்பிரதாய பூர்வமாக வழங்கியதைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே.ஆர்.எல்.ஜெயலத் ஆகியோர் ஏனையோருக்கு வழங்கிவைத்தனர்.

ஏற்கனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நடத்துனர்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறியில் பங்கு பற்றியோர்களில் ஒரு தொகுதியினருக்கு இச் சான்றுகள் மற்றும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு தொகுதியினருக்கு இவை வழங்கப்படவுள்ளதாகவும், இவ்விடயம் தனியார் போக்குவரத்துத் துறையின் சேவையில் ஒரு மைல்கல் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.செயலக உதவி அரச அதிபர் தலைமைப் பீட அதிகாரி ஜெ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உறுப்பினர் சமன் சமரசேகரா மற்றும் யாழ். மாவட்ட தனியார் பயணிகள் போக்குவரததுச் சேவை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (பா)

# அமெரிக்காவில் கைதான ராஜ் ராஜரட்ணம் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி



பங்கு விற்பனை மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்படவுள்ள Galleon Group நிறுவனத்தின் இயக்குனரான பிரபல அமெரிக்க வர்த்தகர் ராஜ் ராஜரட்ணம் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவிகளை வழங்கியதாக Vanity Fair எனும் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் பிறந்து அமெரிக்காவில் வசித்துவரும் ராஜ் ராஜரட்ணம், 2002 ஆம் ஆண்டளவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கவேண்டும் என வலியுறுத்தி உரையாற்றியதாக இச்சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும் இச்சஞ்சிகை வெளியிட்டுள்ள செய்தியை மறுத்துள்ள ராஜ் ராஜரட்ணத்தின் சட்டத்தரணி John Dowd, விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கவில்லை எனக் கூறியுள்ளார்.

ராஜ் ராஜரட்ணம் தொடர்பில் அமெரிக்க புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை நடத்தியதாகவும், தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கியதாக ராஜ் ராஜரட்ணம் மீது எவ்வித குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை எனவும் John Dowd குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இக்குற்றச்சாட்டுக்களில் எவ்வித அடிப்படையும் கிடையாது என John Dowd தெரிவித்துள்ளார். நிதிச் சந்தை மோசடி குறித்து நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படவுள்ள நிலையில் இவ்வாறு அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க நிதிச் சந்தை மோசடியில் ஈடுபட்டதாக ராஜ் ராஜரட்ணம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நிதிச் சந்தை சார்பாக தகவல்களை இரகசியமாக பெற்றுக் கொண்டு இவர் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், நிதிச் சந்தை மோசடிகளில் ஈடுபட்டமைக்காக அமெரிக்காவில் வழங்கப்படக் கூடிய அதிகூடிய தண்டனை ராஜ் ராஜரட்ணத்திற்கு வழங் கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கரவெட்டி கோட்ட பாடசாலைகளின் கணித்தற்திறன் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

கரவெட்டி கோட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கோட்டமட்ட விரைவு கணித கணித்தற்திறன் போட்டி முடிவுகள் கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

தரம் 2- உ.ஹவ்யா (நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலை), ஜெ.அரவிந்தன் (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்), பா.பாதுஜன் (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), ஸ்ரீ.லதாங்கி (துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்), யோ.அகலயன் (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை).

தரம் 3 - பு.ரிலக்ஷிகா, தி.பிரியங்கா, சி.மோகனதாஸ், (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), மோ.கீர்த்திகா, சி.சிவானுஜன். (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை),

தரம் 4 - ர.சங்கவி (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), ஜெ.சதுர்ஜன் (கரணவாய் மணியகாரன் தோட்டம்), ம.அபிநயா (நெல்லியடி மெ.மி. த.க.பா), அ.வர்ஷன் (கரணவாய் மணியகாரன் தோட்டம்), பா.விதுர்ஷனா (கரவெட்டி மாணிக்க வாசகர் அ.த.க.பா. வித்தி).

தரம் 5 - அ.லோகிதா, ந.விந்துஜன் (கரணவாய் தாமோதர வித்தி), ம.துஷாந் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி), ச.திருஜன் (கரணவாய் தாமோதர வித்தி), ஜெ.கஜீவன் (துன்னாலை காசிநாதர் வித்தி). யோ.நிருஷிகன் (யா/நெல்லியடி மெ.மி. த.க.பா)

(உ.109)

# முதியோர் நலனுக்கான வேலைத்திட்டம் அவசியம்



(கொழும்பு)

2050 ஆம் ஆண்டில் இலங்கையில் முதியவர்களின் எணணிக்கை 25 வீதமாக அதிகரிக்கும் என உலக முதியோர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

முதியவர்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் தற்போது 9.6 சதவீதமான முதியவர்கள் வாழ்கின்றனர்.

முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நாளுக்கு நாள் முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்வதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 44 ஆவது அகில இந்திய சர்வோதய மாநாடு

(யாழ்ப்பாணம்)

44 ஆவது அகில இந்திய சர்வோதய மாநாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் மதுரை காந்தி மியூசியத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதியப் பொறுப்பாளரும் சர்வோதய இலக்கிய பண்ணை நிறுவுநருமான எம்.மாரியப்பன் தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள காந்திய அமைப்புக்களைச் சேர்ந்த 30 பேர் வரை அகில இலங்கை காந்திய சேவா சங்கத் தலைவர் தி.இராஜநாயகம் தலைமையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் 4 ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

(உ, 130)

# சுற்றுலாத்துறை விழிப்புணர்வுக் கல்வி வடபகுதி மக்களுக்குக் கிடைத்துள்ளது

## யாழ். இந்தியத் தூதரகத்திற்கான துணைத்தூதுவர் வி. மகாலிங்கம்

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாத்துறையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் அதற்கான முயற்சிகள் குறைவாக இருப்பினும் தன்னளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வளர்ச்சியின் ஒரு கட்டமாகவே சுற்றுலாத்துறை சார் கற்கை நெறிகள் வடக்கு-கிழக்கில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் வி. மகாலிங்கம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை 82 பிறவுண் வீதியிலுள்ள நேசன் பொப்பியூலர் ரவல்ஸ் அன் ருவஸ் நிறுவனத்தின் விமான பற்றுச்சீட்டுக்கள், சுற்றுலாத்துறை, சுற்றுலாத்துறையும் கற்கைநெறிகள் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அரசின் உதவியுடன் மென்மேலும் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் வகையிலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலும் பல உதவித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய புனரமைப்பு, கொழும்பு யாழ்ப்பாண புகையிரத பாதைப் புனரமைப்பு, தூத்துக்குடி கொழும்பு கப்பல் சேவை மற்றும் மன்னார் இராமேஸ் வரம் கப்பல் சேவை போன் றன மிக விரைவாக புனரமைக்கப்பட்டு வருகின்றது. யாழ். போக்குவரத்துத் துறை, சுகாதாரத்துறை, உணவு விடுதிகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

இத்துறை சார்பாக கல்வியை ஊட்டல், இது பற்றிய விழிப்புணர்வுகள், வடகிழக்குப் பகுதிக்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு அமைய நேசன் பொப்புலர் ரவல்ஸ் அன் ருவஸ் நிறுவனம் சுற்றுலாத்துறை கற்கை நெறியையும், சுற்றுலாத்துறை ஊடகங்கள் கற்கை நெறியை ஆரம்பிக்க உள்ளதை நாம் மிகவும் வரவேற்பதுடன், இந்திய அரசு தமிழ் மக்களின் சமாதானமாக நிம்மதியாக வாழ்வதற்கான வாழ்வாதாரத்தை உயர்த் துவதற்கும் என்றும் பின்னிக்காது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன், வரலாற்று துறைப் பேராசிரியர் சிற்றம்பலம், சக்தி தொலைக்காட்சி முகாமையாளர் கஜமுகன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

## புதிய நிர்வாகம் தெரிவு

(கோப்பாய்)

சிறுப்பிட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புது வருட நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக க. கிருபாகரனும், உபதலைவராக தி. சதீஸ்குமாரும், செயலாளராக கு. சதீஷ்வரனும், உப செயலாளராக அ. விஜயகுமாரும், பொருளாளராக த. கதீஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். நிர்மலன் தெரிவித்துள்ளார். (உ-08)

## சக்கரம் இதழ் வெளியீட்டு விழா

(தும்பளை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் சக்கரம் இதழ் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் க. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை பொன் சுகந்தனும் மதிப்பீட்டுரையை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ. சிவநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை மடாதிபதி வை. ஆனந்தராசன் வழங்க தொழிலதிபர் க. இராசதுரை பெற்றுக் கொள்வார். (62)

## அச்செழுவில் பரிசளிப்பு விழா

(அச்சுவேலி)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக 'நிவிள் ஏ' நிறுவனத் தலைவரும் சட்டத் தரணியுமான க. செவ்வேள் கலந்து கொள்வதுடன், சிறப்பு விருந்தினராக அச்செழு கிராம சேவகர் சி. தயாபரன், அச்செழுப் பிரதேச சமுர்த்தி அலுவலர் த. கேதீசன், வ.கி. தென்பகுதி ப.நோ.கூ.ச கணக்காளர் ச. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தினைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (03)

## நெடுந்தீவு பிரதேச சபையின் செயற்பாட்டு ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச சபையின் சம்பிரதாய பூர்வமான சபை நடவடிக்கைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண்ராஜா, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ர. விஜயலட்சுமி, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சி. அச்சுதன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ம. ஜெகூ, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆ.சிறி, நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ அரியநாயகம், நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஈ.என்.பி. எக்கநாயக்க, நெடுந்தீவு கடற்படை முகாம் கட்டளை அதிகாரி கப்டன் சி. நூனா ரணசிங்க ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (54)

## மாகாண கண்காட்சி விழா அடுத்த வாரம் கைதடியில்


(அரியாலை)

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் மாகாணக் கண்காட்சி விழா அடுத்த வாரம் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் என மாகாண சபை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இக்கண்காட்சி எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி 10ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மாபெரும் மாகாணக் கண்காட்சியை கைதடியில் நடத்துவற்கான ஏற்பாடுகளை மாகாண சபையின் உயர் வட்டார மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக கைதடியில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள காணியொன்றைத் தெரிவு செய்து கண்காட்சி நடத்துவதற்கான தீர்மானமும் ஆயத்தங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## உறுப்பினர் தெரிவு



அச்சுவேலி பத்தைமேனி பாரதி வீதியைச் சேர்ந்த பாலன் வரதராசா யாழ். அரசினர் வைத்தியசாலையின் வைத்தியசாலைக் குழு உறுப்பினராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார். சமூக ஆர்வலரான இவர் இளைப்பாறிய கூட்டுறவு உத்தியோகத்தரும், அச்சுவேலி மகாவித்தியாலய பழைய மாணவருமாவர். (08)

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பதிவு இலக்கம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய மூவருக்கு எதிராக மூவாயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

யாழ். பொலிஸாரினால் குறித்த மூவரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். மேற்படி வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ. ஆனந்தராசா மூவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் அபராதம் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதா ரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எஸ்)

## கோவையை பூரணப்படுத்தவும்

(அச்சுவேலி)

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றி சுயவிபரக்கோவையைப் பூரணப்படுத்தப்படாத நிலையில் சேவையைவிட்டு இடைவிலகி வெளிநாடுகளில் வசிப்பவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னரும் தமது சுயவிபரக் கோவைகளைப் பூரணப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதேவேளை, யுத்த காலத்தில் ஏற்பட்ட விசேட விடுமுறைகள் மற்றும் சேவையின் போது உயிரிழந்த ஊழியர்களின் சம்பளத்தை உரியவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் தொடர்பாகவும் மாகாண கல்விப் பணிப்பாளரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (03)

## விவசாயிகளுக்கு கடன் வழங்க இலங்கை வங்கி கருத்தரங்கு

அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையினால் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவது தொடர்பான கருத்தரங்குகள் கிளையின் பொது முகாமையாளர் த. புவனேந்திரன் தலைமையில் சிறுப்பிட்டி புத்தூர், ஆவரங்கால் அச்சுவேலி, பத்தைமேனி, இடைக்காடு, வளலாய் போன்ற இடங்களில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே சில இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. இக்கருத்தரங்குகளில் வங்கியால் வழங்கப்படவுள்ள கடன் திட்டங்கள், அதனாலேற்படும் நன்மைகள் பற்றி விரிவான கருத்துக்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் விவசாயிகளுக்கான விவசாயக்கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. (08)

## மாணவிகளை ஏற்றிவந்த ஆட்டோ விபத்தில் சிக்கியது

(குருநகர்)

பாடசாலை மாணவிகளை ஏற்றிவந்த ஆட்டோ வானொன்றுடன் மோதியதில் பலத்த சேதமடைந்தது. மாணவிகள் மயிரிழையில் காயங்கள் இன்றித் தப்பிக்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலய அரச மரத்தடித் திருப்பத்தில் நடைபெற்றது.

வானுக்கு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஆட்டோவின் முன்பக்கக் கண்ணாடிகள் நொறுங்கியதுடன் முன்பக்கத்தில் சேதமும் ஏற்பட்டது.

ஸ்தலத்துக்குப் பொலிஸார் வருகை தந்தபோதும் வாகன சாரதிகள் தமக்குள் சமரசமாகப் பிணக்கைத் தீர்த்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் அண்மை நாட்களாக வாகன விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருவதுடன் இதில் மரணங்களும் சம்பவிக்கின்மையும் குறிப்பிடத்தக்கது. (68)





யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படும் பெண்கள் விடுதி மற்றும் வகுப்பறைக் கட்டடத்திற்கான உபகரணங்களை யாழ். மாநகர முதல்வர் மற்றும் சபை உறுப்பினர் விஜயகாந் ஆகியோர் பாடசாலை நிர்வாகத்திடம் சம்பிரதாய பூர்வமாக கையளிப்பதைக் காணலாம்.

# மக்களுக்கான உதவிகள் வழங்குவதில் யு.என்.டி.பி. நிறுவனம் பாராட்டுக்குரியது

## நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்




(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் யு.என்.டி.பி. நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது என ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அண்மையில் வலிவடக்கு (தெல்லிப்பளை) பிரதேச பிரிவிற்குட்பட்ட கட்டுவன் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் யு.என்.டி.பி. நிறுவனத்தால் இடம் பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கான தொழில் முயற்சி உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த கால யுத்தத்தினால் எமது மக்கள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த இழப்புக்களில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து நாங்களும் மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களது இம்முயற்ச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் மீள் குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குவதில் யு.என்.டி.பி நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகின்றது என்றார்.

இந்நிகழ்வில் கட்டுவன் மேற்கு கிராமத்தில் 16 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களும், 8 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், 16 பயனாளிகளுக்கு கட்டட நிர்மாண வேலைக்கான உபகரணங்களும் 2 பயனாளிகளுக்கு மரவேலைக்கான உபகரணங்களும் இரு பயனாளிகளுக்கு அலுமினிய பொருத்துகை, துவிச்சக்கர வண்டி திருத்தத்திற்கான உபகரணங்களும், 10 பயனாளிகளுக்கு கோழி வளர்ப்பிற்கான கோழிக் கூடு மற்றும் கோழிக் குஞ்சுகளும் வழங்கி வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் வலிவடக்கு பிரதேசசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் இணைப்பாளருமான அன்பு, ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டை அமைப்பாளர் வள்ளுவன் யு.என்.டி.பியின் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ராஜ்குமார் கிராம அலுவலர் கால்நடை வைத்தியர் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நவராத்திரி விழாவும் சிறப்புச் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் நவராத்திரி விழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் வியாழக்கிழமை வரை பிற்பகல் 3 மணிமுதல் 5.30 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெற்றுவரும் இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றது.

சக்திக்குரிய விரதமான இன்று ஞாயிற்றுக்கிழமை கேட்டவரம் அருள்வாள் அம்பிகை என்னும் விடயம் பற்றி எஸ். பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து யாழ். விஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப் பாடசாலை நிச்சாமம் ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (உ)

# இளைப்பாறிய கிராம அலுவலருக்கு இன்று பணி நயப்பு விழா



ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 16 ஆண்டுகள் பணியாற்றி அண்மையில் இளைப்பாறிய கிராம அலுவலர் இராசாகணேசலிங்கத்தின் பணி நயப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமாதான நீதவான் மூ. ஆனந்த கிருஸ்ணன் தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் பிரதம விருநதினராகக் கலந்து சிறப்பிப்பார்.

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலர் சு.முரளிதரன், ஆவரங்கால் சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவர் அ.தில்லைநாதன், ஆவரங்கால் மேற்கு பதில் கிராம அலுவலர் பு.சாந்தரூபன், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் க.சிறிஸ்கந்தராசா, ஊரெழு கிராம அலுவலர் எஸ்.ரி.வரதராஜன், வலிகாமம் கிழக்கு மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் இ. மயில்வாகனம், ஆவரங்கால் மேற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் சி.கருணாகரன், அதிபர்களான அ.அருணநதிசிவம், கே.விஜயதேவன், த.ராதாகிருஸ்ணமூர்த்தி, மற்றும் சமாதான நீதவான் கா.சிவசோதி ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர்.விழாக்குழுச் செயலாளர் நீ.மயில்வாகம் நன்றியுரை வழங்குவார்.

இளைப்பாறுகை பெற்ற இராசா கணேசலிங்கம் அச்சு வேலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். 37 ஆண்டுகள் கிராம அலுவலராகப் பணியாற்றிய இவர் அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் தேவ்ஸ்தானம் அச்சு வேலி தோப்பு மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் ஆகியவறறின் முகாமைத்துவப் பணிகளிலும் முக்கிய பங்காற்றுகிறார்.

# மத்தியஸ்தர் சபைகளை அதிகாரிகள் பார்வையிட்டனர்

(கோப்பாய்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகளை பார்வையிட யாழ்ப்பாணத்துக்கு கொழும்பிலிருந்து வருகை தந்த ஏசியன் நிலையத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், பிரதேச மத்தியஸ்த சபைகளுக்குச் சென்று செயற்பாடுகள் தொடர்பாக தவிசாளர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையில் பிணக்காளரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையும் பிணக்காளர்களின் எண்ணிக்கை கூடுதலாக அதிகரித்துள்ளதை நேரில் அவதானித்த அதிகாரிகள் இரண்டு வருட காலத்தில் 800இற்கும் மேற்பட்ட பிணக்குகள் இணக்கப் பாட்டுக்கு கொண்டுவந்த தகவல்களை நேரில் அறிந்த அதிகாரிகள் தவிசாளர் சபை உறுப்பினர்களை நேரில் பாராட்டியுள்ளனர். (8)

# உடைத்த மதில்கள் மீண்டும் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகளுக்கு இடையூறாகக் காணப்பட்ட மக்களின் முன்பக்க மதில்கள் உடைக்கப்பட்டு மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் சந்திக்கு அண்மையில் இருந்து அனேக மக்களின் வீட்டு மதில்கள் வீதி அகலிப்புக்கள் சிக்கியுள்ளன.

இந்த மதில்கள் தற்போது உடைக்கப்பட்டு அகலிப்புக்கு இடையூறு இன்றி மீண்டும் அமைக்கப் பட்டு வருகின்றன.

இந்த மதில்கள் உடைத்து மீண்டும் அமைத்து கொடுத்துவருவதால் வீதி அகலிப்புப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன. (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(02.10.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
புரட்டாதி 15 ஆம் நாள்.
இராகுகாலம் 4.32–06.02, சுபநேரம் 9.02 –10.32,
நட்சத்திரம்: அனுஷம் மு.ப.10.41 வரை
திதி: பஞ்சமி காலை மு.ப 6.09 வரை ஷஷ்டி பி.இ.4.25 வரை
ஷஷ்டி விரத நன்னாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

- **மேடம்:–** பணக்கஷ்டம், குடும்பத்தில் குழப்ப நிலை, சகோதரவெறுப்பு, சுற்றத்தார் ஆதரவு, தேக சுகம் பாதிப்பு.
- **ரிஷபம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தேக ஆரோக்கியம், அதிர்ஷ்டம் வரும், இனசன அழைப்பு.
- **மிதுனம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதரபாசம், அதிகாரப் போட்டி, தொழில் விருத்தி.
- **கடகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தேக ஆரோக்கியம், இனசன அழைப்பு, கடன் வசூல்.
- **சிம்மம்:–** பணக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, தேக நிலை பாதிப்பு, கடன் வாங்குதல், தொழில் முடக்கம்.
- **கன்னி :–** குடும்பத்தில் நிம்மதி, பணம் வரும், வீண் அலைச்சல், தொழில் விருத்தி, தேக நிலை பாதிப்பு.
- **துலாம் :–**பணக் கஷ்டம், தொழில் முடக்கம், மனக்குறை, நினைத்ததைச் சாதித்தல்,தேக சுகக்குறைவு.
- **விருச்சிகம்:–** குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், பிணக்குத் தீர்தல், வெளியார் உதவி, தூரத்திலிருந்து நற்செய்தி.
- **தனுசு:–**பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, உற்சாகமின்மை, கடன் படல் சபலபுத்தி.
- **மகரம்:–** குடும்பத்தில் நிம்மதி, பணம் வரும், அதிர்ஷ்டம் வரும், எதிரியை வெல்லுதல், தேக ஆரோக்கியம்.
- **கும்பம் :–** பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, மனக்கவலை மருத்துவச் செலவு, வீண் அலைச்சல்.
- **மீனம் :–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், வெளிநாட்டுதவி, வீண் கோபம், உறவினர் வருகை.


# மீண்டும் சொந்த இடத்தில் பூநகரி ப.நோ.கூ.சங்கம்

போர் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பூநகரி ப.நோ.கூ.சங்கம் மீண்டும் சொந்த இடத்திற்கு வரமுடியாத நிலையில், கடந்த இரண்டு வருட காலமாக ஜெயபுரத்தில் இயங்கி வந்தது. இச்சங்கத்தை மீண்டும் பூநகரிக்கு மாற்றுமாறு பல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

கடந்த மாதம் முதல் பூநகரி வாடியடியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. சங்க கட்டடத்தில் பூநகரி கிராமிய வங்கியும் இயங்கி வருவதாகவும் வங்கி வாடிக்கையாளர்கள் தமது தேவைகளைப் பூநகரியிலேயே பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (112)

# மருந்து உறைகள் அன்பளிப்பு

அளவெட்டி அரசினர் வைத்தியசாலையின் தேவைக்கென அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினால் பத்தாயிரம் மருந்துறைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதுவரை காலமும் வெறும் காகிதத் தாள்களிலேயே மருந்துகள் சுற்றி வழங்கப்பட்டதுடன், அவற்றுக்கான பாவிப்பு குறிப்புக்களும் வாய்மொழி மூலமாகவே வழங்கப்பட்டன. இதனால், நோயாளர்கள் பலவிதமான நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர். இந் நிலையிலேயே அளவெட்டி அபிவிருத்தி மன்றம் முதற்கட்டமாக பத்தாயிரம் மருந்துறைகளை வழங்கியுள்ளது. இதற்கான ஆரம்ப நிதியை லண்டனில் இருந்து வருகை தந்த அளவெட்டியைச் சேர்ந்த பொ. கணேஸ்வரன் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதவானாக சக்தியப்பிரமாணம் செய்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு 254 ஆம் இலக்க மத்தியஸ்த சபை உறுப்பினர்களான தவிசாளர் சி.நற்குணலிங்கம் உதவித்தவிசாளர் ந.செவ்வேள் திருமதி பு.நடராசா சி.தவ ராசா, தா.சண்முகநாதன், க. கதிர்காமத்தம்பி -ஆகியோரை காணலாம். (109)

## பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுனர்

# வடமாகாணத்திற்கு ஆறு பதக்கங்கள்

(தியகம)

தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் நேற்று மேலும் ஆறு பதக்கங்களை வடமாகாணம் அள்ளியுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டி கொழும்பு தியகமவில் உள்ள மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றைய இரண்டாம் நாளில் வடமாகாணம் சார்பாக பங்குகொண்ட யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் இரு சாதனைகளை முறியடித்ததுடன் ஆறு பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

இதில் 21 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீராங்கனை ச. தனுசா 1.45 மீற்றர் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் வெற்றிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோயதக் கல்லூரி வீரர் பா. லவணன் 3.65 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், அதே பிரிவில் குளமங்கால் மகாவித்தியாலய வீரர் அ. பிரசாந் 3.60 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரி வீராங்கனைகள் சா. தனுசா, அ. பவித்திரா, ச. காவேரி ஆகியோர் பதக்கங்களை வென்று கொடுத்தனர்.

இதேவேளை, முதல் நாள் போட்டியில் இரண்டு பதக்கங்களை யாழ். மாவட்ட வீரர்கள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (12, 93)

# அருணோதயவிற்கு ஐந்து பதக்கங்கள்

## சாதனைகளும் முறியடிப்பு

(தியகம)


தனுசா

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி வீராங்கனைகள் இரு சாதனைகளை முறியடித்ததுடன் நேற்றைய தினம் வடக்கு மாகாணம் வென்றெடுத்த ஆறு பதக்கங்களில் ஐந்தைக் கைப்பற்றியுள்ளனர்.

19 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அ.பவித்திரா 3.00 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்ததுடன் தங்கப் பதக்கத்தையும் வென்றார். கடந்த வருடம் சக வீராங்கனை ச. தனுசா 2.90 மீற்றர் பாய்ந்து சாதனை படைத்திருந்தார்.

21 வயதுப் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் ச. தனுசா 3.10 மீற்றர் பாய்ந்து புதிய சாதனை படைத்ததுடன் தங்கப் பதக்கத்தை வென்றார். கடந்த வருட சாதனையாக 2.95 மீற்றர் பதிவாகியிருந்தது. இதே பிரிவில் ச. காவேரி 2.91 மீற்றர் பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, 21 வயதுப் பெண்களுக்கான உயரம் பாய்தலில் ச. தனுசா 1.45 மீற்றர் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்றார்.

17 வயது ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பா.லவணன் 3.65 மீற்றர் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்த வகையில் நேற்றைய இரண்டாம் நாள் போட்டியில் ஐந்து பதக்கங்களை வென்றெடுத்த அளவெட்டி அருணோதயக் கல்லூரி வடக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளது. (93, 12)

# ஜொனியன்ஸ் இலகு வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். படைகளின் தலைமையகம் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் - பொதுமக்கள் நல்லுறவு ருவென்ரி 20 தொடரின் போட்டி ஒன்றில் ஜொனியன்ஸ் அணி இலகுவான வெற்றிபெற்றது.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யூனியன்ஸ் அணி, லவேந்திரா மற்றும் காண்டீபன் ஆகியோர் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்ட எண்ணிக்கைப் பெற்றுக் கொள்ளவில்லை. பந்து வீச்சில் லவேந்திரா, காண்டீபன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஜொனியன்ஸ் அணி 10.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அன்புஜன் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ரஜிந்தன் 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

# மெய்வல்லுனர் போட்டி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் கடமை புரியும் உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொள்ளும் சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டிகள் நவம்பர் மாதம் 5, 6 ஆம் திகதிகளில் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமிடையே ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி போட்டி நிகழ்ச்சியில் 35, 40, 45, 50 மற்றும் 55 வயதுப் பிரிவுகளில் சுவட்டு மைதான மெய்வல்லுனர் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப் போட்டி நிகழ்வுகளில் கலந்து கொள்ள விரும்பும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தமது விண்ணப்பப்படிவங்களை செயலாளர், 53 விவேகானந்தஹில், கொழும்பு-13 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்ட மட்ட கால்பந்து

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர் இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாக கோட்ட வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வயது அடிப்படையில் நடைபெறவுள்ள இக் கால்பந்தாட்டத் தொடருக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதன்படி 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மல்லாகம் மத்திய வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், 16 வயதுப் பிரிவுக்கான போட்டிகள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்திலும் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்போட்டித் தொடர்களில் மோ[illegible] வுள்ள அணிகளை தயாராகிக் கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (93)

## அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடர்

# கிண்ணம் வென்றது பல்கலை அணி


கிண்ணத்தைப் பெற்றுக் கொள்ளும் அணித் தலைவர்


வெற்றிக் களிப்பில் அணி வீரர்கள்....

(யாழ்ப்பாணம்)

அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ். பல்கலைக்கழக அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நேற்று யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்தது.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியும், யாழ். பல்கலைக் கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி 41.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 68, உத்தமன் 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனார்த்தனன் நான்கு, ஜெயரூபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். பல்கலைக்கழக அணி 40.3 ஓவர்கள் நிறைவில் வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் 70, சகரீதன் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். பந்து வீச்சில் சாம்பவன் இரண்டு, பங்குஜன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இத்தொடரின் சிறந்த களத்தடுப்பாளராக யாழ். பல்கலைக்கழக வீரர் செல்ரனும், தொடரின் சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியைச் சேர்ந்த ஜனார்த்தனனும், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கே.சீ.சீ.சீ. அணியைச் சேர்ந்த பங்குஜனும், போட்டியின் ஆட்டநாயகனாகவும், தொடரின் ஆட்டநாயகனாகவும் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த ஜெயரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். (07,12)


# வேதனை அளிக்கிறது

முழு உடல் தகுதியுடன் இருப்பதாக தெரிவித்த பின்னரும் தேர்வுக் குழுவினர் புறக்கணிப்பது வேதனை அளிக்கிறது என்று வேகப்பந்து வீச்சாளர் ஆசிஷ் நெஹ்ரா தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து தொடருக்கு முன்பாகவே எனது உடல்தகுதிச் சான்றிதழை தேர்வுக் குழுவினருக்கு அனுப்பி இருந்தேன். ஆர்.பி. சிங்குக்கு அவசர அழைப்பு அனுப்பியவர்கள் என்னை கண்டுகொள்ளவில்லை. இப்போது, சொந்த மண்ணில் இங்கிலாந்துடன் நடக்கவுள்ள தொடரிலும் எனக்கு வாய்ப்பு கொடுக்காமல் புறக்கணித்துள்ளனர். நான் என்ன தவறு செய்தேன் என்றே எனக்குப் புரியவில்லை. கடந்த 2 ஆண்டுகளில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்திய வேகப்பந்து வீச்சாளர் நான் தான். பரபரப்பான கடைசிக் கட்டங்களில் அதிக ஓவர்களை வீசியுள்ளேன். என்னை நீக்கியதற்கு வயது ஒரு காரணம் என்றால், சேவாக் என்னை விட மூத்தவர் தானே? ராவிட்டுக்கு 39 வயதில் ஒருநாள் போட்டியில் இடம் கொடுத்திருக்கிறார்களே எனவும் தெரிவித்தார்.

## சிறப்பான செயற்பாட்டின் மூலம் ஒப்பந்த காலத்தை நீடித்து

# 2015 உலகக் கிண்ணத்தை வென்றெடுக்க முயற்சிப்பேன்



சிறந்த நண்பனான டொம் மூடி பயிற்சியாளராக செயற்பட இலங்கை கிரிக்கெட்டிடம் குறிப்பிட்டிருந்தார் எனவும் தெரிவித்தார்.

(கொழும்பு)

இரண்டு ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையிலேயே தற்போது நான் இலங்கை அணியின் பயிற்றுநராக பொறுப்பேற்றுள்ளேன். இக்காலப் பகுதியில் அணியை சிறப்பாக வழி நடத்தி, ஒப்பந்த காலத்தை தொடர்ந்து நீட்டித்து 2015 உலகக் கிண்ணத்தை இலங்கை அணிக்கு வென்று கொடுக்க முயற்சிப்பேன் என இலங்கை அணியின் புதிய பயிற்சியாளர் ஜெய் மாரஷ் தெரிவித்துள்ளார்.


கடந்த வியாழக்கிழமை பயிற்சியாளர் பதவியை ஏற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதல் மேலும் அவர் குறிப்பிடுகையில், எனது தற்போதைய ஏற்பாடுகள் அனைத்தும் அடுத்து நடைபெறவுள்ள பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடருக்கு இலங்கை அணியைத் தயார் செய்வதுதான். இதில் டெஸ்ட் கிரிக்கெட் குறித்து அணியினருடன் தீவிரமாக ஆலோசிப்பேன். ஒருநாள் மற்றும் ருவெண்ரி 20 போட்டிகளில் நாம் வலுவாகவே உள்ளோம். எதிர் வரும் ருவெண்ரி 20 உலகக் கிண்ணம் மிக முக்கியமானது.

ஆனால் தற்போதைய நிலையில் பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட் போட்டியிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

இதில் டொம் மூடியின் அனுபவத்தை கொண்டே தாம் இலங்கை அணியின் பயிற்சியாளர் பதவியில் இணைய விருப்பம் கொண்டேன். எனது

# மனநிலையில் மாற்றம்வேண்டும்



(புதுடில்லி)

சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனநிலையை மாற்றியமைக்க வேண்டும். போட்டியில் தோற்றுவிட்டால், அதன் பின்னர் சாதனைகள், புள்ளி விபரங்களால் என்ன பயன்? என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் கேள்வி எழுப்பியுள்ளார்.

அடுத்த தொடரில் இந்திய அணி எப்படி வெற்றி பெறப்போகிறது என்பது பற்றி ஊடகங்கள் தெளிவுபடுத்தவேண்டுமே ஒழிய சச்சின் டெண்டுல்கரின் 99 சர்வதேச சதங்கள் பற்றியும், அவர் எப்போது 100ஆவது சதத்தை அடிப்பார் என்பது பற்றியும் தான் எப்பொழுதும் ஆர்வமாக அலசி ஆராய்ந்து பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். தனிநபரின் சாதனைகளை பாராட்டக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் முதலில் நாட்டுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

சச்சின் டெண்டுல்கர் 99 சதங்கள் அடித்திருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆன்றால் அவர் அடித்த சதங்களில் எத்தனை போட்டிகள் வெற்றியில் முடிந்திருக்கிறது என்பது எத்தனை பேருக்கு தெரியும்? அவர் அடித்த சதங்களில் இந்தியா 60 ஆட்டங்களில் வெற்றி கண்டிருக்கிறது. இது பற்றிய தகவல்களையும் யாராவது அளித்தால் மகிழ்ச்சி அடைவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# டெஸ்டிலும் இடம்பிடிப்பேன்

## பார்த்தீவ் பட்டேல் நம்பிக்கை

(ஜெய்ப்பூர்)

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியிலும் இடம் பிடிப்பேன் என்று பார்த்தீவ் பட்டேல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் 2 ஒருநாள் போட்டியில் பங்கேற்கும் அணியில் விக்கெட் கீப்பர் பார்தீவ் பட்டேல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுவரை 28 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். இதில் எனது பங்களிப்பு குறிப்பிடத்தக்க வகையில் இருந்துள்ளது. இப்போது இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாட வாய்ப்புக் கிடைத்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. இனி டெஸ்ட் அணியில் இடம் பிடிக்க முயற்சி மேற்கொள்வேன். டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் நாங்கள் சரியாக விளையாடவில்லை. அங்குள்ள சூழ்நிலைகளுக்கு எளிதில் பொருந்திப் போக முடியவில்லை. இந்தியாவில் விளையாடும் போது இது போன்ற பிரச்சினைகள் இருக்காது. தோல்வியில் இருந்து மீண்டு வரும் தொடராக இது அமையும் எனவும் தெரிவித்தார்.

# எவ்வித பாதிப்புமில்லை




தொடர்ந்து விளையாடும் வகையில் உள்ள ரென்னிஸ் அட்டவணையால் எந்தவித பாதிப்பும் இல்லை என இந்திய ரென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள, சர்வதேச ரென்னிஸ் அட்டவணையில் தொடர்ந்து வீரர்கள் போட்டிகளில் பங்கேற்கும் விதமாக உள்ளது. இதில் மாற்றம் செய்ய வேண்டும் என நடால், முர்ரே போன்ற முன்னணி வீரர்கள் கருத்து தெரிவித்து இருந்தனர்.

இது குறித்து பூபதி கூறியதாவது: ரென்னிஸ் அட்டவணை குறித்து ஏன் இந்தளவுக்குச் சர்ச்சை கிளப்புகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க விரும்பினால் பங்கேற்கலாம். அல்லது அப்போட்டியினை தவிர்த்து விடலாம். தற்போதுள்ள, அட்டவணை என்னை பெரிய அளவில் பாதிக்கவில்லை. நன்றாக உள்ளதாக தான் நான் உணர்கிறேன் எனவும் தெரிவித்தார்.

# டோக்கியோ பசிபிக் ரென்னிஸ் தொடர் வோனரேவா - ரட்வன்ஸ்கா மோதல்





(டோக்கியோ)

பான் பசிபிக் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்திற்கு ரஷ்யாவின் வேரா வோனரேவாவுடன் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்கா மோதவுள்ளார்..

அரையிறுதியில் செக் குடியர சின் பெட்ரா குவிட்டோவாவுடன் நேற்று முன்தினம் மோதிய வோனரேவா 7-6, 6-0 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இரண்டாவது அரை இறுதியில் ரட்வன்ஸ்கா பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்காவுடன் மோதினார். மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் ரட்வன்ஸ்கா 6-3 என்ற கணக்கில் முதல் செட்டை வென்று முன்னிலை பெற்றார்.

அடுத்த செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த அஸரென்கா 6-4 என்ற கணக்கில் வென்று சமநிலை ஏற்படுத்தினார். கடைசி செட்டில் தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய ரட்வன்ஸ்கா, அஸரென்காவின் சர்வீஸ்களை அதிரடியாக முறியடித்து 6-3, 4-6, 6-2 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் வோனரேவா ரூ ரட்வன்ஸ்கா மோதுகின்றனர்.


# சீன ஓப்பன் ரென்னிஸ் தொடர் செரீனா, ஷரபோவா விலகல்

(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரிலிருந்து ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் ஆகியோர் விலகியுள்ளனர்.

காயம் காரணமாக இந்தப் போட்டியில் இருந்து விலகுவதாக ஷரபோவாவும், செரினாவும் தெரிவித்தனர்.

தரவரிசையில் 2ஆம் இடத்தில் உள்ள ஷரபோவா ஜப்பானில் நடைபெற்று வரும் பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் விளையாடி வந்தார். வியாழக்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பெட்ரா விட்டோவாவை அவர் எதிர் கொண்டார். இப்போட்டின் போது காலில் காயம் ஏற்பட்டதால் அவர் பாதியிலேயே விலகினார். மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வு எடுக்க இருப்பதால், சீன ஓப்பன் ரென்னிஸில் இருந்து விலகுவதாக



அவர் அறிவித்துள்ளார்.

இதேபோல செரினா வில்லியம்ஸும் காயம் காரணமாக விலகியுள்ளார். சீன ஓப்பனில் இருந்து தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அவர் விலகியுள்ளார்.

உலகின் முதல் நிலை வீரரான நோவாக் ஜோகோவிச்சும் இப்போட்டியில் பங்கேற்கவில்லை. அவரும் உடல்நிலையையே காரணமாகக் கூறியுள்ளார். இவர்கள் தவிர ராபின் சோடர்லிங், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோரும் பங்கேற்கவில்லை.

# தொடர்ந்து தக்கவைப்பது கடினம்

ரென்னிஸ் அரங்கில் முதல் இடத்தில் நீடிப்பது மிகவும் கடினம் என, டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கி தெரிவித்துள்ளார்.

முதல் இடத்தை தக்க வைப்பது என்பது சாதாரண விடயம் அல்ல. இது மிகவும் கடினமானது. முதல் இடத்திற்கு முன்னேறிய போது எல்லையில்லா ஆனந்தம் அடைந்தேன். நீண்ட நாள் உழைப்பிற்கு கிடைத்த பலனாகத் தான் இதனைப் பார்த்தேன். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அதே இடத்தில் நீடிக்க வேண்டும் என்பது தான் என் விருப்பம். யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்வதற்காக கடினமாகப் போராடினேன். ஆனால், தோல்வி அடைய நேர்ந்தது ஏமாற்றம் அளிக்கிறது. தற்போது நடக்கும் பான் பசிபிக் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பட்டம் வெல்வேன் என்ற நம்பிக்கை உள்ளது.

காயம் மற்றும் பிற காரணங்களால் பாதிக்கப்படாமல் இருக்க, இறைவனை வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால் காயத்



தினால் பாதிக்கப்பட்டால் அதிலிருந்து மீண்டும் பழைய நிலையை அடைவது சிரமம் எனவும் தெரிவித்தார்.

# முதல் கனவு நிறைவேறியது

என் நோக்கம் எனக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்வதே ஆகும். நான் பெரிய அளவில் பேச விரும்பவில்லை. இந்த தேசிய அளவிலான அழைப்பால் என் முதல் கனவு நிறைவேறி உள்ளது என இங்கிலாந்து அணிக்கெதிரான முதலிரு ஒரு நாள் போட்டியில் இடம்பிடித்த இந்திய அணியின் புதுமுக சுழற்பந்து வீச்சாளர் ராகுல் ஷர்மா தெரிவித்தார்.

இப்போது, என் அடுத்த இலக்கு நன்றாக விளையாடி இந்திய அணிக்கு வெற்றி தேடித் தருவதே ஆகும். இந்திய அணியில் அனில் கும்ளே இடத்தைப் பிடிப்பது பற்றி யோசிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் ஊழல்மோசடி வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிற்கு எதிரான ஊழல் மோசடி வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ரத்வத்த சுக வீனமடைந்துள்ள காரணத்தினால் விசாரணைகளை ஒத்திவைப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 24ம் திகதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்துள்ளதாக ஜெனரல் ரத்வத்தவிற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஐம்பது கோடிக்கு மேற்பட்ட சொத்துக்கள் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் குவிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ரத்வத்தயின் உடல் நிலைபற்றி மருத்துவ அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் சுனில் ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கை விமானப் படைக்கு சீனாவின் இரு புதிய விமானங்கள்

(கொழும்பு)

சீனாவில் இருந்து பெறப்பட்ட இரண்டு போக்குவரத்து விமானங்கள் இலங்கை விமானப்படையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கொழும்பில் உள்ள சீனத் தூதரக முதல்நிலைச் செயலர் வாங் ஜியான் பெங் இந்த இரு விமானங்களையும் இலங்கை விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்சல் ஹர்ச அபேவிக்கிரமவிடம் கையளித்தார்.

எம்.ஏ-60 ரகத்தைச் சேர்ந்த இந்தப் போக்குவரத்து விமானங்களில் 56 பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான வசதிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.இந்த இரு விமானங்களையும் இலங்கை விமானப் படையின் வர்த்தக நிறுவனமான ஹெலிருவர்ஸ் மூலம் உள்ளூர் பயணிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)


ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்கந்த சிங்கமலை சுரங்கப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயிலில மோதுண்டு அவர் உயிரி ழந்துள்ளார்.

சடலம் கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மின்சாரதேவையை பூர்த்தி செய்ய பாரிய வேலைத்திட்டம் அவசியம்

(கொழும்பு)

**அதிகரித்துவரும் மின்சாரத்திற்கான கேள்வியை நிவர்த்திசெய்வதற்கு பாரிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பிலுள்ள மக்கள் கலா கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது எஸ்-5 கருத்திட்டத்தின் கீழ் மின்சார சபையில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

உலகிலுள்ள அனைத்து வழங்களையும் உபயோகித்து முடிந்த பின்னர் 2030ஆம் ஆண்டளவில் மின்சாரத்திற்கு பாரிய தட்டுப்பாடு நிலவவுள்ளதாக அமைச்சர் தெரிவிக்கிறார்.

உலகில் எதிர்வரும் காலத்தில் மின்சாரத் துறையில் புதிய மின்சக்திகளை கண்டுபிடிப்பதை விட தற்போதுள்ள மின்சக்திகள் துரிதமாக அரிதாகி வருகின்றன. என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# 26 பொலிஸ் அதிகாரிகளின் வெகுஜன சேவைப் பயிற்சி நிறைவு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 26 அதிகாரிகளுக்கு வெகுஜன சேவையை விருத்தி செய்வதற்கான பயிற்சியொன்று பிரித்தானிய ஸ்கொட்லண்ட் யாட் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியை பெற்ற பொலிஸ் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வு பொலிஸ் மா அதிபர் என் கே இளங்கக்கோனின் தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீ கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய, பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் மூன்று கட்டமாக இந்தப் பயிற்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்தப் பயிற்சியைப் பெற்று கொண்டவர்கள் ஒன்பது மாகாணங்களுக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# படையினரின் தற்கொலை அதிகரிப்பதாக தகவல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் முக்கிய படைப்பிரிவுச் சிப்பாய்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. கடந்த காலத்தில் யுத்தத்தின் போது முக்கிய பங்காற்றிய படையணிகளைச் சேர்ந்தவர்களே அவ்வாறு தற்கொலை செய்து கொள்வதில் கூடுதலாக ஈடுபட்டு வருவதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

அண்மைக்காலமாக அவ்வாறு தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.அதன் காரணமாக இச்சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளவும், எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் இராணுவ உயரதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# போர்க்குற்றச் சாட்டுக்களை சுமத்த மீண்டும் முயற்சி என்கிறது திவயின

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக மீளவும் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு சில தரப்பினர் முயற்சி செய்து வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும்,

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்கில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களும்,அதனுடன் தொடர்புடைய 17 வெளி நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், புத்திஜீவிகள் என தங்களை அடையாளப் படுத்திக் கொள்ளும் 50க்கும் மேற்பட்டவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக வலியுறுத்தக் கூடிய தகவல்களை குறித்த தரப்பினர் திரட்டி வருகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக காவல் துறையினர் நடத்திய விசாரணைகளின் பின்னர் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கொழும்பு, ரொரன்டோ, மெல்பர்ன், பேர்லின், நோர்வே, ஜெனீவா மற்றும் லண்டன் போன்ற நகரங்களை மையமாகக் கொண்டு இந்தச் சக்திகள் இயங்கி வருவதாக திவயின தெரிவித்துள்ளது.

# வாகன ஆசனப்பட்டி அணிதல் நேற்று முதல் அமுலாகியது

(கொழும்பு)

ஆங்கில எழுத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சகல சிற்றூர்திகள் உள்ளிட்ட வாகனங்களுக்கு ஆசனப்பட்டி அணியும் சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதன்படி வாகனத்தில் முன்பக்க ஆசனத்தில் அமர்ந்து செல்வோர் பாதுகாப்புப் பட்டியை அணிய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதவேளை விபத்துக்களை தடுக்கும் பொருட்டு, நேற்று முதல் கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து பார ஊர்திகளிலும் பாதுகாப்புப் பட்டி பொருத்தப் பட்டிருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையகம் தெரிவித்துள்ளது.

# வாக்களிப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம்

(கொழும்பு)

தபால்மூலம் வாக்களிக்க முடியாமல் போன அரச ஊழியர்களுக்கு, இம்மாதம் 7ஆம் திகதி வரை அதற்கான சந்தர்ப்பம் இருப்பதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தத்தமது நிறுவனத் தலைவர் ஊடாக தபால் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமனசிறி தெரிவிக்கிறார்.

இதற்கான ஆலோசனை அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கியுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. தபால்மூலம் வாக்களிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இரண்டு நாட்களிலும் 80வீதத்திற்கும் அதிகமான அரச ஊழியர்கள் வாக்களித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சிவநகர் கிராமத்தில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

கிளிநொச்சி சிவநகர்ப் பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி சிவநகர்ப் பிரதேசத்தில் உள்ள மயானப் பகுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரீ-56 ரக துப்பாக்கி ஒன்றும் 30 ரவைகளையும் கிளிநொச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பாவட்டகுளம் பகுதி விவசாயக் காணியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆர்.பி.ஜி.குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

# இரட்டை நிலைப்பாட்டில் மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்கள் பலர் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றும் நிலையில், அரசாங்க மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்கள் தனியார் நிறுவனங்களில் கற்பிக்கக்கூடாது என்று தெரிவிப்பதன் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரி விடயத்தில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இரட்டை நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதாக மாலபேயிலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரியான, தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவகம் தெரிவித்துள்ளது.

மாலபே மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நியாயமற்ற குற்றச் சாட்டுகளை சுமத்துவதாகவும் பொது மக்களுக்கு தவறான தகவல்களை வழங்குவதாகவும் அக்கல்லூரியின் பணிப்பாளர் டாக்டர் சமீர சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழு தனது விசாரணையை பூர்த்தியாக்கும் வரை இம் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்ப்பதை நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளதாகவும் ஆனால் உண்மையில் அப்படி இக்கல்லூரி கோரப்படவில்லை எனவும் டாக்டர் சமீர சேனாரட்ன கூறினார்.

# கூட்டமைப்புடன் பேசுவதற்கு அரசாங்கம் ஆவலாக உள்ளது



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருக்கின்றது. எக்காரணம் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏமாற்றும் எண்ணம் எமக்கில்லை. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தீர்வு விடயம் உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் பேச்சு வார்த்தை நடத்துவது அவசிய மாகும்.

ஜெனிவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடு களின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரின் போது எமக்கு எதிராக நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு சில தரப்பினர் முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சிகள் வெற்றியடையவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தில் தாமதம் இருப்பதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக சபாநாயகர் நடவடிக்கைகளை மேற் கொள்வார். அந்த வகையில் நாடாளுமன்ற தெரி வுக்குழு விரைவில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. தமிழ்த் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் ஒரு கட்டத்தில் ஸ்தம்பித மடையும் நிலைக்குச் சென்றது என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றார்.

# பனை அபிவிருத்திச் சபையின் வருமானம் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

இலங்கை பனை அபிவிருத்திச் சபை 2010 ஆம் ஆண்டில் 20 மில்லியன் ரூபாவை இலாபமாக பெற்றுள்ளது. கடந்த வருடத்தைவிட இது 12 மில்லியன் ரூபா அதிகமாகும்.

பனை சார்ந்த சமூகத்தின் சமூக அந்தஸ்தை உயர்த்துவதிலும் பனை வளத்தை புதுப்பிப்பதிலும் பனை அபிவிருத்திச் சபை கவனம் செலுத்துவதாக சபையின் பொதுமுகாமையாளர் எம்.பி.லோகநாதன் தெரிவித்தார்.

பனை உற்பத்திப் பொருட்களை பிரபல்யப்படுத்துவதற்கான விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள், இப்பொருட்கள் சுரண்டப்படுதை தடுக்கும் நடவடிக்கைகள், பனை சார்ந்த கைவிணைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இத்துறையில் ஈடுபடும் பெண்கள் குழுக்களை அமைத்தல் என்பனவற்றிலும் இச்சபை கவனம் செலுத்துவதாகவும் அவர்கூறினார்.

2008 ஆம் ஆண்டு இச்சபை நஷ்டத்தில் இயங்கியபோதிலும் கடந்தவருடம் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களை தரமுயர்த்துவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதுவே திடீர் வருமான அதிகரிப்புக்கு காரணம் எனவும் லோகநாதன் தெரிவித்தார்.

நாட்டின் தென்பகுதியில் பனை உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையங்களை அமைக்கவும் இப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஜப்பான் அரசாங்கத்தின் இலகு கடன் வழங்கல்

(கொழும்பு)

இயற்கைப் பேரழிவுகள் மற்றும் மறுவாழ்வுத்திட்டம் எனும் கருப்பொருளின் கீழ் ஜப்பான் அரசாங்கம் 9.3பில்லியன் ரூபாவை இலங்கைக்கு இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மத்திய வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களின் மீள் கட்டுமான மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

நாட்டில் இவ்வாண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளம் காரணமாக பாரிய இழப்புகள் ஏற்பட்டன. குறிப்பாக மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பாதை மற்றும் வாய்க்கால்கள் சேதமடைந்ததுடன் இப்பகுதியில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டன. அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகளும் பெரும் சேதமடைந்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மற்றும் உட்கட்டமைப்புச் சேவைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஜப்பான் அரசாங்கம் பல்வேறு மனிதாபிமான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இவ்வாண்டில் கிழக்கு ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தினால் பாரிய அழிவுகளை சந்திக்க நேர்ந்தது. எனினும் ஜப்பான் அரசாங்கம் தனது மனிதாபிமான அடிப்படையிலான சர்வதேச நாடுகளுக்கான கடன் வழங்கல் செயற்பாடு தொடரும். அந்த வகையிலேயே ஜப்பான் அரசாங்கம் மேற்படி கடன் தொகையை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பெறுபேறு

(முழங்காவில்)

முழங்காவில் ம.வியின் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இரு மாணவிகள் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

இதில் விஜயநாதன் அனுஜா 147 புள்ளியையும், பிரபாஸ்கரன் கீர்த்தனா 149புள்ளியையும் பெற்றுள்ளன. இவர்கள் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் என அவர் தெரிவித்தார். (112)

# சிறுவர்களுக்கான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன



(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்கு பிந்தியதான காலப்பகுதியில் மீள்குடியமர்ந்த சிறுவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்குமான பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிராந்திய இணைப்பாளர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தினநிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே மாவட்ட ரீதியாக பல்வேறு சிறுவர் தினநிகழ்வுகள் நடைபெற்றிருந்த போதும் யுத்தத்திற்கு பின்னதாக வடமாகாண சிறுவர்களை உள்ளடக்கியதாக சிறுவர் அபிவிருத்தி நிறுவனம் நடாத்தும் இந்நிகழ்வு முக்கியத்துவம் பெறுவதாகவும் குறிப்பிட்ட அவர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பெருமளவு நிதி யுத்தத்தின் பின்னர் சிறுவர் அபிவிருத்திக் கும் அவர்களது குடும்பங்களின் சேமநலனிற்காவும் கிடைத்துவருவதாகவும் தெரிவித்தார்.

இந் நிதியினைக் கொண்டு வடமாகாணத்தில் வறுமைக்குட்பட்ட மற்றும் யுத்தம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டுவரு வதாகவும் உள்ளூர் அரசசார் பற்ற நிறுவனங்ளின் ஊடாக இந்த அபிவிருத்தி வேலைத் திடடங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் தொடக்கவுரையாற்றிய சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் சி.வி.கே சிவஞானம் தெரிவிக்கையில் மர்மமனிதாக்கள் பிரச்சினையின் காரணமாக ஒட்டுமொத்த சமூகமும் குறிப்பாக சிறார்களையும் அவர்களது கல்வியும் பாதித்திருக்கின்றன. இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மனிதர்களே இவர்களுக்கும் தாய், தந்தையர் சந்தேகநபர்கள் உண்டு அவர்களது குடும்பத்தில் இவ்வாறான ஒரு பிரச்சினை ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று சிந்திக்கவும் யார் பணித்தாலும் ஊதியம் வழங்கினாலும் மனிதாபிமான அடிப்படையில் அதனைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் இந்தச் செய்தியை வெளிப்படுத்தும் முகமாகவும் இந்நிகழ்வு அமைவதாகவும் குறிப்பிட்டார்.

(பா)

# சிறுவர் துஸ்பிரயோகங்கள் இலங்கையில் அதிகரித்துள்ளது

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் துஸ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் சிறுவர் துஸ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் 18 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

24 மணித்தியால அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி புகார் செய்தவர்களின் எண்ணிக்கையே இந்த புள்ளி விபரத் தரவு சுட்டி நிற்பதாகவும், இதனை விடவும் அதிகளவான துஸ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் அதிகளவு சிறுவர் துஸ்பிரயோர்கச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் குறைந்தளவான சம்பவங்களே வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமூகக் கலாச்சாரக் கட்டமைப்பு மற்றும் ஏனைய பிற காரணிகளினால் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவில் முறைப்பாடு செய்யப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்க ஊழியர்களுக்கு வவுனியாவில் மேலும் வீட்டுத்திட்டம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டமானது மேலும் இரண்டு இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள அரச திணைக்களங்களில் பணி புரியும் காணி அற்ற அரச ஊழியர்களுக்கான காணியுடனான வீட்டுத்திட்டம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வந்த நிலையில் கடந்த வாரம் வவுனியா வேப்பங்குளத்தில் ஒரு தொகுதி அரச ஊழியர்களுக்கான வீட்டுத்திட்டம அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அமைச்சர் விமல் வீரவன்ச வினால் ஆரம்பித்த வைக்கப் பட்டது.

இந்நிலையில் மேலும் ஈரப்பெரியகுளம் மற்றும் நெடுங்கேணியிலும் வீடமைப்புத்திட்டங்களை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளைஇ இந்திய வீட்டத்திட்டத்தின் ஊடாக 175 வீடுகள் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவை மரையடித்த குளம் இராமயன்குளம் மற்றும் சிங்கள் பிரதேச செயலகப் பகுதியிலும் வவுனியா வடக்கு புளியங்குளம் பகுதியிலும் நடைமுறைப் படத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் பயனாளிகள் தெரிவும் இடம்பெற்று நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# மாமியாரை கொலை செய்தவருக்கு 5 வருட கடூழியச் சிறை

(கொழும்பு)

தனது மனைவியின் தாயாரை பொல்லொன்றினால் தலையில் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நபருக்கு நீர் கொழும்பு மேல் நீதிமன்ற சிரான் குணரத்ன ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். அத்துடன் ஐயாயிரம் ரூபா அபராதமும் நீதிபதியினால் விதிக்கப்பட்டது.

வடக்கு கதிராணை பிரதேசத்தை சேர்ந்த நிமல் சஞ்சீவ பெரேரா என்பவருக்கே கடூழிய சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

2007 மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் கதிராணை கட்டுவா கெலேவத்தையில் வைத்து எம்.லீலாவதி (50வயது) என்பவரின் தலையை பொல்லொன்றினால் தாக்கி கொலை செய்ததாக பிரதிவாதி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது

# பழங்களுக்கு மருந்து...



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரசாயன மருந்து விசிறப்பட்ட வாழைப்பழங்களும் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த இரசாயன மருந்து விசிறப்பட்டு பழுக்கவைக்கப்பட்ட வாழைக்குலைகள் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன. அவற்றை வியாபாரிகள் கொள்வனவு செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

மனித பாவனைக்கு பாவிக்க முடியாத தடை செய்யப்பட்ட இந்த இரசாயன மருந்துகளை காய் வாழைக்குலைக்கு விசிறி பழுத்த பின்னர் அவற்றை மக்கள் வாங்கி அதைப் பயன்படுத்துவதால் நோய்த் தாக்கத்திற்கு இலக்காகலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது கதலி வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பை அடுத்து சிலர் அதை பிஞ்சுக் குலையாக வெட்டி இரசாயன மருந்து விசிறி சந்தைப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாம்பழத்திற்கு இவ்வாறு இரசாயன மருந்துகள் விசிறப்பட்டு பழுக்க வைக்கப்படட பின்னர் அவை மக்களுக்கு வைக்கோலில் போட்டு பழுக்க வைத்த பழம் என்று கூறி விற்கப்படுகிறது.

தற்போது சிலர் பணத்திற்காக வாழைக் குலைக்கும் இரசாயன மருந்து விசிறி பழுக்க வைத்து விட்டு அவை புகை போட்ட பழம் என்று விற்கின்றனர்.

குடாநாட்டில் தற்போது இவ்வாறான வியாபார உற்பத்திகள் அதிகரித்துக் காணபடுகின்றன. இதனால் பாதிக்கப்படுவது அப்பாவி மக்களாகும்.

ஒருபுறம் டெங்கின் தாக்கம் மக்களை விரட்டும் அதே சமயத்தில் இவ்வாறு இரசாயன மருந்து விசிறப்பட்டு பழங்கள் சந்தைகளில் தாராளமாக விற்கப்படுகின்றன.

இவ்வாறான பழங்கள் விற்பனை செய்வோர் மீது சுகாதாரப் பகுதியினர் உரிய நடவடிக்கை மேற்கொள்வது தற்போதைய சூழலில் மிக அவசிய தேவையாகும் என்று பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (வி)

## ஐ.தே.க.வின் கீதத்தில் சுயேட்சைகள் பரப்புரை

ஐ.தே. கட்சியின் உத்தியோகபூர்வ கீதம் மற்றும் வர்ணங்கள் என்பவற்றை சுயேட்சைக் குழுக்கள் பல, தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள சுயேட்சைக் குழுக்கள் பல தமது கட்சியின் கீதம் மற்றும் வர்ணங்கள் என்பவற்றுடன் கட்சியின் முந்தைய தலைவர்களது புகைப்படத்தையும் பயன்படுத்தி வேட்பாளர்களை ஏமாற்ற முனைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் கீதமானது கட்சியின் உத்தியோகபூர்வ வைபவங்களுக்கோ, கட்சின் பொதுச் செயலாளரினால் அனுமதி அளிக்கப்பட்ட பிரசார நிகழ்வுகளுக்கோ பயன்படுத்தலாம்.

தவிர, வேறு எந்த நிகழ்வுகளுக்கோ, செயற்பாடுகளுக்கோ பயன்படுத்த முடியாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தம்பதிகள் தற்கொலை முயற்சி; தூக்கில் தொங்கி மனைவி மரணம்

(திருகோணமலை)

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உவர்மலைப்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்றினை மீட்டுள்ளதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரகாஸ் சுஜிதா (வயது -30) இல 186, கண்ணகிபுரம், உவர்மலைப் பகுதியைச்சேர்ந்தவரும், திருமலை மட்கோ அல்மின்ஹாஜ் முஸ்லிம் வித்தியாலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரியையுமென பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவி தூக்கில் தொங்கியதை அவதானித்த கணவர் சமையலறைக்குச்சென்று கத்தியை எடுத்து வந்து மனைவியின் சேலையை வெட்டிவிட்டு தானும் கத்தியால் தனக்கு தானே வெட்டிக் கொண்டார். வெட்டியவர் திருமலை நிலாவெளி தமிழ் மகா வித்தியாலய ஆசிரியரான சின்னத்தம்பி பிரகாஸ் (வயது - 32) எனவும் தெரிய வருகின்றது. தற்போது அவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

கணவனும், மனைவியும் விரும்பியே திருமணம் செய்து கொணடவர்கள் எனவும், அவர்களுக்கு குழந்தைகள் இல்லையென்றும் அயலவர்கள் தெரிவித்தனர். அத்துடன் யாழ்ப்பாணம், அல்வாயைப் பிறப்பிடமாகக்கொண்டவர்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. சடலத்தை திருகோணமலை மாவட்ட நீதவான் கே.தட்சணா மூர்த்தி பார்வையிட்ட பின்னர் திருகோணமலை பொதுவைத்தியசாலைக்கு சட்ட வைத்தியரின் அறிக்கையைப் பெறுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சர்வதேச வழக்குகளை எதிர்கொள்ள ஒருபோதும் அஞ்சப் போவதில்லை



(கொழும்பு)

சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கைக்கு எதிராக எத்தனை வழக்குகளைத் தொடுத்தாலும் அவை அத்தனையையும் எதிர்கொள்ள இலங்கை ஒருபோதும் அஞ்சப் போவதில்லை என்று முன்னாள் சட்ட மா அதிபரும் அமைச்சரவை ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு தேவையான அனைத்துச் சட்ட உதவிகளையும் பாதுகாப்பையும் அரசாங்கம் வழங்கும். இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடரும் நாடுகளுக்கு நாம் நல்ல பாடங்களை புகட்டுவோம். விரைவில் அந்நாடுகளால மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல் சம்பவங்களை அதே சர்வதேச நீதிமன்றில் முன்வைத்து வழக்கு தொடருவோம்.

ஐ.நா.வில் இலங்கைக்கான நிரந்தர பிரதி வதிவிட பிரதிநிதியாக உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு தேவையான சட்டப் பாதுகாப்புள்ளது. எனவே அச்சப்படத் தேவையில்லை. சிவில் வழக்கு என்றாலும் ஏற்றுக கொள்ளப்பட்ட சர்வதேச இராஜதந்திர கொள்கைகளுக்கு அமைவாக சவேந்திர சில்வா பாதுகாக்கப்படுவார். எவ்வாறாயினும இலங்கையின் நற்பெயரைக் கெடுக்கும் வகையில் மேற்குலக நாடுகள் மற்றும் அந்நாடுகளில் வாழும் தமிழ் இடம்பெயர் சமூகத்தினர் வழக்குகளைத் தொடர்கின்றனர். இவை நாளை அவர்களுக்கு ஏற்படும் எனக் கூறினார்.

## சுகாதார அமைச்சின் விசாரணையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர்

(கொழும்பு)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து சுகாதார அமைச்சு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள், சுகாதார அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்தார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் குறித்து பதிலைப் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

தமது சங்கத்தின் தலைவர் மீது உயர்கல்வி அமைச்சரால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அமைச்சு மட்டத்திலான விசாரணையை நடத்தி அது தொடர்பிலான அறிக்கையை வெளியிடுமாறு சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக உபுல் ஜயசூரிய தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார சேவையிலுள்ள வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மீதும் உயர்கல்வி அமைச்சர் முனவைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தமது அமைப்பு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன் மூலம் வைத்தியர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட முயற்சிப்பதாகவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சஙகம் குற்றஞ்சாட்டியுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தமது தொழிற் சங்கத்தின் மத்திய செயற்குழு தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்துப் பெண்ணுக்கு பாலியல் தொல்லை சந்தேக நபருக்கு 5 இலட்சம் ரூபா பிணை

(கொழும்பு)


இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணொருவரை பாலியல் ரீதியில் தொந்தரவுக்குட்படுத்த முயன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட நபர ஒருவரை ஐந்து இலட்சம் ரூபா சீரப் பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கப் புலி நேற்று அனுமதியளித்தார்.


இச்சந்தேக நபர், கொழும்பு கோட்டையிலுள்ள ரெலிக்கொம் கட்டடத்திற்கு அருகில் இருந்த இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தர் ஒருவரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையில், இங்கிலாந்தைச் சேர்ந்த அப்பெண் கடந்த மாதம் 28 ஆம் திகதி சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வந்ததாக தெரிவித்துள்ளனர்.

முறைப்பாட்டு அறிக்கையின் படி, புறக்கோட்டை பிரதான வதியில் கடையொன்றுக்குச் சென்ற இப்பெண்ணிடம் இலங்கையர்கள் மோசமானவர்கள் எனவும் இலங்கையர்களை நம்ப வேண்டாம் எனவும் சந்தேக நபர் தெரிவித்தார். அப்பெண் சந்தேக நபரை புறக்கணித்தபோது அப்பெண்ணின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

அப்பெண் கடையிலிருந்து வெளியே வந்தபோது, பின் தொடர்ந்து சென்ற சந்தேக நபர் தான் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் எனவும் அப்பெண்ணின் நடத்தையில் சந்தேகம் இருப்பதாகவும் அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரிக்க வேண்டுமெனவும் தெரிவித்தாக முறையிடப்பட்டுள்ளது.





நேற்று முன்தினம் அலரிமாளிகையில் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலிகளின் உறுப்பினர்கள் 1800 பேரை சமூகத்துடன் இணைக்கும் செயற்பாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி புனர்வாழ்வளிக்கப்பட்ட ஒருவரை பெற்றோருடன் கையளிப்பதையும், கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

# இப்படியும் மீன்?

கடலில் எத்தனையோ அழகுகள் கொட்டிக்கிடக்க, அழகற்ற மீன்வகைகள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்திருப்பதுதான் நீங்கள் காணும் பிளாப்.·.பிஷ். பார்க்கும்போதே பாவத்தை வரவழைக்கும் இது 12 அங்குலம் மட்டுமே வளரும். மேலும் இது கடலில் மிக ஆழத்தில் அதாவது கிட்டத்தட்ட 1 கிலோ



மீட்டர் அடிப்பரப்பில் வாழ்கிறது. உணவுக்காக இது எங்கேயும் நகர்வதில்லை. தான் இருக்கும் இடத்தைத்தேடி வரும் இரைகளை மட்டுமே உண்டு வாழும் இப்பிராணி இது.

அவுஸ்ரேலியக் கடலில் வாழும் இந்த மீனுக்கும் இப்போது ஆபத்து வந்துவிட்டது. முன்பெல்லாம் மேலோட்டமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த அவுஸ்ரேலியர்கள் இப்போதெல்லாம் கொஞ்சம் அடியிலும் வலையை வீசி விடுகிறார்களாம். மற்ற மீன்களோடு இந்த பிளாப்.·.பிஷும் வலையில் சிக்கிக் கொள்கிறதாம். இப்படி தெரியாமல் பிடிக்கப்படும் இந்த வகை மீன்கள் கரைக்கு வந்ததும் இறந்து போகின்றன. இந்த அரிய வகை அழகற்ற மீனை காப்பாற்றும் படி கோரிக்கைகள் எழுந்து வருகின்றன. அவுஸ்ரேலியா மனம் வைக்கும் என்றும் நம்பப்படுகிறது

# விசித்திர பறவைகள்

இதுவரையிலும் வித்தியாசமான பல மனிதர்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். அதேபோன்று சில விலங்குகளைப் பற்றியும் அதன் விசித்திரமான சில செய்திகளையும் நாம் கேட்டிருப்போம். அவர்கள் மட்டுமா நாங்களும் ரொம்பவே விசித்திரமாகத் தான் இருக்கிறோம் என்று சொல்லாமல் சொல்கிறது இந்தப் படங்கள். அப்படி என்ன விசித்திர மாக இருக்கின்றன என்பதை நீங்களும் பாருங்கள்.







# இப்படியும் நோய்



எம்மை பயமுறுத்தும் தோற்றத்தில் நடமாடும் பல மனிதர்களை எம் வாழ்வில் நாம் பார்த்திருந்தாலும் இந்த மனிதர் சற்று வித்தியாசமானவர். பாகிஸ்தானின் லாகூர் நகரில் வாழும் சைன் மும்தாஜ் என்கின்ற ஒரு மனிதருக்கே பயமுறுத்தும் வகையிலான தலை காணப்படுகிறது. மூன்று தலைகளை ஒன்றாக சேர்த்து ஒட்டியது போல இவருடைய தலை பார்ப்பவர்களை அதிர்ச்சிக் குள்ளாக்குகின்றது.

இவருக்கு இந்த விசித்திரமான தலைகள் ஒருவகை நோயினால்தான் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இது பற்றி இவருடைய பெற்றோர் தெரிவிக்கையில் சைனுக்கு சிறுவயதில் ஒரு நோய் ஏற்பட்டது. அப்போது இது தொடர்பாக அவர் உடலில் தாக்கங்கள் இருக்கவில்லை. ஆனால் தற்போது அவருக்கு 19வயது ஆகிறது. அவருடைய தலை வழமைக்கு மாறாக பெரிதாகிக்கொண்டு போகிறது. இவற்றை வைத்தியரீதியில் சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் கடவுளை பிராத்தித்து க்காத்திருப்பதாக குறிப்பிடுகின்றனர்.

மேலும் சைன் மும்தாஜை அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த எட்வின் கிறிக் என்கின்ற டாக்டர் நேரில் சென்று பார்வையிட்டு இவருக்கு ஆரம்ப மருத்துவச் சிகிச்சைகளை அளித்துள்ளார். அது மட்டும் இன்றி இவரை அவுஸ்ரேலியாவுக்கு அழைத்துச் சென்று தன்னால் இதனை சரிசெய்ய சரியான சிகிச்சைகளை அளிக்க முடியும் எனவும் அவர் இதற்கு சம்மதம் தெரிவித்ததால் இவருக்கு அறுவைச்சிகிச்சை செய்து குணப்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# மலர்களின் மணம்



எவ்வளவோ செடிகளைப் பார்க்கிறோம். எத்த னையோ மலர்கள். ஒவ்வொன்றும் ஒரு விதம். அந்த மலர்களின் அமைப்பு, மென்மை, அழகு ஆகியவை நம்மை வியக்க வைக்கின்றன. சில செடிக ளின் மலர்கள் என்று நினைப் பது உண்மையில் மலர்களாக இருக்காது. சில செடிகளில் வெண்ணிற உறைகளில் இருந்து எட்டிப் பார்ப்பவை மலர்களே அல்ல. மலர் போலத் தோற்றமளிக்கும் போலிகள்! சில செடிகளின் வண்ண இலைகளே மலர்கள் போல் காட்சியளிக்கும்.

மலர்கள் இல்லாதவற்றை மலர்கள் என்று எண்ணுகிறோம். சில செடிகளில் மலர்களை நம்மால் அடையாளம் தெரிந்துகொள்ள முடிவ தில்லை. புற்களின் நுனியில் உள்ள சிறுதுணுக்கு கள் புற்களின் மலர்கள்தான்! சில தானியங்க ளின் இளங்கதிர்களே அவற்றின் மலர்கள்.

பூந்தாதையோ, விதைகளையோ அல்லது இரண்டையுமே உருவாக்கும் தொகுதியே மலர்களாகும். விதைகளை உடைய தாவரத்துக்கே மலர்கள் உள்ளன. விதைகள் உருவாக்குவதற்குக் காரணமாக உள்ள தாவரத்தின் பாகங்களே மலர்கள் என்று சொல்லலாம்.

மகரந்தச் சேர்க்கை புரிய உதவும் பூச்சியினங்களைக் கவர்ந்திழுக்க, பூக்கள் நறுமண வலையை வீசுகின்றன. பூவிதழ்களிலேயே வாசனை தரும் மிகச் சிறிய துகள்கள் உள்ளன. அவையே நறுமணத்தை ஏற்படுத்துகின்றன. பூச்சிகளை மகரந்தம் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியே நறுமணம் என்கிறார்கள், தாவரவியல் நிபுணர்கள்.

சில மலர்களின் இதழ்களில் உள்ள ஒருவித எண்ணை, நறுமணத்தை உண்டு பண்ணுகிறது. அந்த எண்ணைகளைத் தாவரங்கள் தங்கள் வளர்ச்சியின்போது உற்பத்தி செய்திருக்க வேண்டும். மிகச் சிக்கலான அப்பொருள், நடைமுறையில் உருக்குலைந்தோ, சிதைந்தோ எண்ணையாக மாறி காற்றிலோ, வெயிலிலோ ஆவியாகி நறுமணத்தை வெளியிடுகிறது.

எல்லா மலர்களின் நறுமணமும் ஒரேவிதமாக இருப்பதில்லை. சிலவற்றை நாம் விரும்புவோம். சில நமக்குப் பிடிக்காது. ஆனால் பூச்சியினங்களுக்கு ஒவ்வொரு நறுமணமும் நன்றாக நினைவில் இருக்கும். தங்களுக்கு விருப்பமான நறுமணத்தை அவை அறிந்திருக்கும்.

# ஒரு சில்லு சைக்கிள்



நாம் கொஞ்சம் கூட கற்பனை செய்து பார்க்காத பல விடயங் கள் இன்று கண்டுபிடிப்புக்களாக வெளிவந்துகொண்டிருக்கிறது. சைக்கிளுக்கு சக்கரம் இரண்டு என்ற வரைமுறையை மீறி ஒரு சக்கரத்தில் சைக்கிள் வந்துவிட் டது. வெறுமனே ஒரு சக்கரத்தில் சைக்கிளா என கற்பனை பண்ணி பார்க்கும் போது எமக்குள் பல கேள்விகள் எழும். ஆம் இருக்கை எங்கு? பெடல் எங்கு என்று? அந்தக் கேள்விகளுக்கு பதில் படத்தைப் பார்த்தே விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இந்த சைக்கிள் பிரித்தானி யாவைச் சேர்ந்த Ben Wilson என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சக்கரத்துக்குள்ளையே அமைந்துள்ளது இதன் இருக்கை. இந்தச் சைக்கிள் ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் காணப்படுகிறது. எது எப்படியோ இந்தச் சைக்கிளில் இருந்து சவாரி செய்வத அவ்வளவு சௌகரிமானதாக இல்லை என்கின்றனர் விடயம் அறிந்தவர்கள்.

# 114 வயது பாட்டி



அமெரிக்காவின் குடியுரிமை பெற்றுள்ள Besse Cooper என்ற மூதாட்டி உலகின் வாழும் அதிவயது கூடிய நபர் என்ற சாத னைக்கு உரியவராக அறிவிக்கப்பட்டுள் ளார். அமெரிக்காவின் Georgia நகரில் வசிக்கும் இந்த பாட்டிக்கு தற்போதைய வயது 114 வருடங்கள் ஆகும். இவருக்கு 75 வயதுடைய மகன் ஒருவரும் இருக் கிறார். அண்மையில் தாதியர் இல்லத்தில் இவருக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு விழாவில் இவர் கலந்து கொண்டிருந் தார். அப்போது அங்கு வந்த பலர் இவரே உலகின் அதிவயது கூடிய நபராக கின்னஸ் புத்தகத்தில் பதியப்படவேண்டும் என தாம் அனைவரும் விரும்புவதாக தெரிவித்தனர்.

# கனிமொழி உட்பட ஏழு பேருக்கு பிணை வழங்க சி.பி.ஐ.எதிர்ப்பு

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கனிமொழி உள ளிட்ட ஏழு பேருக்கு பிணை அளிக்க சி.பி.ஐ எதிர்ப்புத் தெரி வித்துள்ளது.

டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதி மன்றில் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேடு குறித்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது. இந்த வழக்கில் தி.மு.க எம்.பி கனிமொழி, கலைஞர் தொலைக் காட்சி நிர்வாகி சரத்குமார், முன்னாள் மத்திய அமைச்சர் ராஜாவின் முன்னாள் தனிச் செயலர் சந்தோலியா, ஸ்வான் டெலிகாம் நிறுவனத்தின் புரோ மோட்டர் ஷாகித் பல்வா, குசே கான் வெஜிடபிள்ஸ் நிறுவனத் தின் இயக்குனர்கள் ஆசிப் பல்வா, ராஜிவ் அகர்வால், சினியுக் பிலிம்ஸ் இயக்குனர் கரீம் மொரானி ஆகிய ஏழு பேரும் இரண்டா வது முறையாக பிணை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளனர். இவர்களுக்கு பிணை அளிப்ப தற்கு எதிர்ப்புத் தெரிவித்து சி.பி.ஐ சார்பில் மனுத் தாக்கல் செயயப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: இந்த வழக்கில் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டதற்கு பின் தான் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணை கோர முடியும். எனவே அவர்களுக்கு பிணை அளிக்கக் கூடாது.

கலைஞர் தொலைக்காட்சி யில் கனிமொழிக்கு 20 சதவீத பங்கு உள்ளது. கலைஞர் தொலைக்காட்சியின் செயற்பாடு களில் அவருக்கு முக்கிய பங்கு உண்டு.

கலைஞர் தொலைக்காட்சி யின அன்றாட நடவடிக்கைகளை சரத்குமார் தான் கவனித்து வந்தார். இந்தத் தொலைககாட்சி சனலுக்கு வந்த 200 கோடி



ரூபாய் பரிமாற்றம், நேர்மையான வர்த்தகம் தொடர்பான பரிமாற்றம் அல்ல. சட்ட விரோதமாக வந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெண்கள் பாலியல் பலாத்கார வழக்கு மன்னிப்புக் கோரிய காஷ்மீர் முதல்வர்

(சென்னை)

பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட காஷ்மீர் பெண்களின் பெயர்களை சட்டமேலவையில் வெளியிட்ட தனது செயலுக்காக காஷ்மீர் உமர் அப்துல்லா மன்னிப்புக்கேட்டார். காஷ்மீரில் கடந்த 5 ஆண்டுகளாக பாலியல் பலாத் காரம் செய்யப்பட்ட பெண்களின் பெயர்களை காஷ்மீர் சட்டமேலவை யில் வெளியிட்டபோது பெரும் சர்ச்சை ஏற்பட்டது.




சட்டப்பேரவையில் நேற்றுமுன் தினம் எதிர்க்கட்சித் தலைவர் மெக பூபா முப்தி பேசுகையில், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்க ளின் உண்மைப் பெயர்களை வெளியிடக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதையும் மீறி பாதிக்கப்பட்ட பெண்களின் உண்மையான பெயர் உள்ளிட்ட விபரங்களை அரசு வெளி யிட்டுள்ளது தவறு என்றார். இதையடுத்து தனது செயலுக்காக உமர் அப்துல்லா மன்னிப்புக் கேட்டுக்கொண் டார்.

# 48 இந்திய மீனவர்களை கைது செய்தது பாகிஸ்தான்

(புதுடில்லி)

பாகிஸ்தான் நாட்டின் கடல் எல்லைக்குள் மீன்பிடித்த 48 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.மேலும் அவர்களிட மிருந்து எட்டுப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், மீனவர்கள் விசாரணைக்கு பின்னர் கராச்சியில் உள்ள கப்பல் துறைகள் பாதுகாப்பு ஏஜென்சியிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இந்த மாதத்தில் இந்திய மீனவர்கள் நான்காவது முறையாக கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித் தார்.

# வாச்சாத்தி வழக்கில் நீதி கிடைத்துள்ளது


(சென்னை)

வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் 19 ஆண்டுகளுக்கு பின்பு நீதி கிடைத்துள்ளது என சீமான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்ப தாவது,

வாச்சாத்தி கிராமத்தில் தமிழக வனத்துறை, காவல் துறையினர், வருவாய் துறை அதிகாரிக ளின் துணையுடன் நடத்திய அராஜகத்திற்கு 19 ஆண்டுகளுக்குப் பிறகு நீதி கிடைத்துள்ளது.

முதல்வர்கள் மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன்சிங் நாட்டில் பழங்குடி மக்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை துன்புறுத்த குற்ற-நீதி அமைப்பு கருவியாக பயன்படுத்தப் படுகிறது.

வனச்சட்டம் அவர்களுக்கு எதிராக பயன் படுத்தப்படுகிறது என எடுத்துக் காட்டினார். உள் ளாட்சி அமைப்பு களை கட்சி அர சியலில் இருந்து மீட்டால் அதற்கு தீர்வு ஏற்படும். உள்ளாட்சி அமைப் புகளை மக்களே தங்கள் கைக ளில் எடுத்து நிர் வகித்தால் தான் தங்கள் அதிகாரத்தை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும்.



மேலும் தங்கள் வாழ்வு ஆதாரமாக உள்ள நிலம், நீர், வளம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். உள்ளாட்சியில் இந்த மாற்றம் வரும் போது உண்மையான மக்களாட்சி மலரும். இந்திய அரசமைப்பும், பஞ்சாயத்து ராஜ் சட்ட மும் அளித்துள்ள இந்த ஜனநாயக உரிமைகளை உணர்ந்து மக்கள் தங்கள் கடமையாற்ற வேண்டும். அப்போது சமூக பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்ய முடியும் என்றார்.

# தமிழ்த் தாயின் மடியிலேயே எனது உயிர் பிரியும்



(சென்னை)

தமிழ்த்தாயின் மடியிலேயே எனது உயிர் பிரியும் என தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க அறக்கட்டளையின் சார்பில் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் விழாவுக்கு பொதுச் செயலாளர் க.அன்பழ கன் தலைமை தாங்கினார். தி.மு.க தலைவர் கருணாநிதி கலந்து கொண்டு பெரியார், அண்ணா, பாவேந்தர் மற்றும் கலைஞர் விருதுகளை வழங் கிக் கௌரவித்தார்.

அப்போது அவர் கூறியதா வது:

தி.மு.க.வின் சிறப்பு வாய்ந்த இந்த முப்பெரும் விழாவில் கழ கத்தின் பொருளாளர் ஸ்டாலின் கலந்து கொள்ளாததற்கான காரணத்தை சொல்லியாக வேண் டும். இல்லாவிட்டால் இதையும் அரசியலாக்கி விடுவார்கள். கடநத சில வாரங்களாக நான் சொல்லி யும் கேட்காமல் புயல் வேகத் தில் தேர்தல் பணியில் ஈடு பட்டார். இதனால் 2 நாட்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆகவே இந்த விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. கடந்த சட்டசபைத் தேர்தலின் போது தி.மு.க.தான் ஆட்சிக்கு வரப்போகிறது என்று பலரும் சொன்னார்கள். இப்போது தி.மு.க தோற்று விட்டதா என்று எத்த னையோ பெரியவர்கள், இளை ஞர்கள், தாய்மார்கள் கேட்கிறார் கள்.

ஏதோ தவறு செய்து விட் டோம் என்று இப்போது தாய் மார்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள் யோசிக்கிறாரகள். இதில் ஒரு மகிழ்ச்சி. மலையை தூக்கிக் கொண்டு வருவோம் என்று ஏமாற்றிய காரணத்தி னால் தான் ஆட்சிக்கு வந்துள் ளனர் என் றார்.



ஆஸ்திரியா மற்றும் சுவிஸ்சர்லாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செல்லும் ஜனாதிபதி பிரதீபா பட்டீலைப் பூங்கொத்துக் கொடுத்து வழியனுப்பி வைக்கும் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சபாநாயகர் மீராகுமாரைக் காணலாம்.

# நிஜத்திலும் ஹீரோவான நடிகர்

(சென்னை)

திருடர்களை மோட்டார் சைக்கிளில் போய் துரத்திச்சென்று பொதுமக்களிடம் பாராட்டுப் பெற் றுள்ளார் பிரபல கன்னட நடிகர் ஜக்கேஷ். பெங்க ளூர் மல்லேஸ்வரத்தில் நடிகர் ஜக்கேஷ். தனது வீட்டு முன்பு நின்று கொண்டிருந்தார். அப்போது சாலையில் ஒரு 17 வயது இளம்பெண் காப்பாற்றக் கோரி சத்தம் போட்டார்.



இதையடுத்து சத்தம் வந்த பக்கத்தை நோக்கி திரும்பி பார்த்தார் நடிகர் ஜக்கேஷ். அபபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரு வாலபர்கள் அந்த பெண்ணின் கழுத்தில் கிடந்த சங்கிலியைப் பறிக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பெண்ணோ சங்கிலியை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கதறினாள். ஆனால் பெண்ணை தள்ளி விடடு விட்டு செயினை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பறந்து சென்ற திருடர்களை இவர் துரத்திப்பிடித்துள்ளார்.

14 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பதிலும் கணக்கும்....

எனவே மோதலின் கடைசி 30 நாட்களிலும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட நிலையைப் பற்றி விசா ரணை செய்ய சுதந்திரமானதும் பாகுபாடற்றதுமான ஒரு ஆணைக் குழுவை நியமிக்கலாம். முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் என். பாலகிரு'ணனைப் போன்ற ஒருவர் இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படலாம்.

யுத்தம் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த விடயங்களுக்கு தீர்வு காண இதுவரை என்ன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன? வழங்கப் பட்டுள்ள அரசியல் கட்டமைப்புக்குள் அப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடியதாகவிருந்தும், அப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலங்கை அரசாங்கம் வேண்டுமென்றே தாமதப் படுத்துகிறதா? இலங்கை அரசாங்கம் இந்த இடைப்பட்ட காலத்தில் இந்த விடயங்களுக்குத் தீர்வு காணக்கூடிய தான உறுதியான ஆலோசனைகளை அரசியலமைப்பு திருத்தங்கள் ஊடாக முன்வைத்துள்ளதா?

இவைகள்தான் கணக்கு கூறுவதற்கான நீதியானதும் மற்றும் சட்டபூர்வமான விடயங்கள், மேலும் இந்த விடயங்களைக் கையாளும்போது அவை நேர்மையானதும் ஐக்கியமானது மான முறையில் கையாளப்பட வேண்டும். இலங்கை அரசாங்கமும் மற்றும் சிங்கள அரசியற்கட்சிகளும் நடைமுறைக்கேற்ற நியாயப்படுத்த வேண்டிய விளையாட்டை சர்வதேச சமூகம் என்றழைக்கப்படுபவர்களுடன் விளையாட முடியும், ஆனால் தமிழ் மக்களுடன் .அல்ல, ஏனெனில் அவர்கள் இலங்கை மக்கள் தொகையின் ஒரு பகுதியினர்.

# பிரித்தானிய கடற்படையில் ஆட்குறைப்பு நடவடிக்கை

உலகச் செய்திகள்


(லண்டன்)

பிரித்தானியக் கடற்படையில் ஆட்குறைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாகவுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான கடற்படையினர் பணிகளிலிருந்து நிறுத்தப்படவுள்ள தாக பிரித்தானிய பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் இராணுவக்கட்டமைப்புக்களில் மேற்கொள்ளப்படும் ஆட்குறைப்பின் ஒரு கட்டமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.செலவுகளைக் குறைத்துக்கொள்ளும் நோக்கில் பிரித்தானிய அரசாங்கம் இது போன்ற திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது. இதன் மூலம் ஐந்து பில்லியன் ஸ்ரேலிங் பவுன்ஸ்களை சேமிக்கமுடியும் என்றுஅரசாங்கம் கூறுகின்றது

# பாகிஸ்தான் பயங்கரவாதச் செயற்பாட்டில் மாற்றங்களை கொண்டுவரவேண்டும்

## - ஹிலாரி கிளிண்டன்



(வோஷிங்டன்)

பாகிஸ்தானுடனான உறவை வலுப்படுத்தவே விரும்புவதாக அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

ஹக்கானி பயங்கரவாத அமைப்புடனான உறவை பாகிஸ்தான் உடனடியாக துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க முப்படைகளின் கூட்டுத் தளபதி மைக் முல்லன் சில நாட்களுக்கு முன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது பாகிஸ்தான் தலைவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. அமெரிக்காவுடனான உறவு குறித்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் பாகிஸ்தானுடன் வலுவான உறவை கொள்ளவே விரும்புவதாகக் கூறினார்.

அவர் மேலும் கூறியது: இருநாடுகளுக்கு இடையிலான உறவு வலுவான அடித்தளத்தில் அமைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே நேரம் பயங்கரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் சொர்க்க பூமியாக இருக்கக் கூடாது.

பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா போரிட்டு வருகிறது. பாகிஸ்தான் அதன் செயற்பாட்டில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும். பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவு, புகலிடம் அளிப்பதை நிறுத்திக் கொண்டு அமெரிக்காவுடன் இணைந்து பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். பாகிஸ்தானுடனான உறவு மேம்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது.

உஸ்பெகிஸ்தான் அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பை அளித்து வருகிறது. ஆப்கானிஸ்தானின் மறுசீரமைப்புக்கு அது உதவி வருகிறது. வலுவான, வளமான ஆப்கானிஸ்தான் உருவாக பல வழியிலும் உஸ்பெகிஸ்தான் உதவி வருவதாக ஹிலாரி கிளிண்டன் கூறினார்.

# அல்கொய்தா தலைவர் பலி; அமெரிக்காவில் பலத்த பாதுகாப்பு

(வோஷிங்டன்)

அல்கொய்தாவின் முக்கிய தலைவர் அன்வர் அல் அவ்லாகி ஏமனில் நட்ந்த ஆளில்லா விமானத் தாக்குதலில் பலியான தாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரபு தீபகற்பத்தில் செயல்படும் அல் கொய்தாவின் முக்கிய தலைவர் அன்வர் அல் அவ்லாகி. இவரை அமெரிக்கப் பயங்கரவாதி என பிரகடனப்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இவரை சுட்டுக் கொல்லும்படி தனிப்பட்ட முறையில் உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் 2007 முதல் இவரை அமெரிக்கா தேடி வருகிறது. இந்நிலையில் ஏமனின் கிழக்குப் பகுதியில் உள்ள மரிப் மாகாணத்தில் அமெரிக்காவின் ஆளில்லா விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவ்லாகி கொல்லப்பட்டார். இத்தகவலை அமெரிக்க அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர். இதை ஏமன் அரசும் உறுதிப்படுத்தியுள்ளது.



இதனைத் தொடர்ந்து அல்கொய்தாவின் பழிவாங்கல் தாக்குதல் நடவடிக்கைகள் அமெரிக்காவில் நிகழலாம் என உளவு அமைப்பு எச்சரிக்கை விடுத்தது. இதைத் தொடர்ந்து நியூயோர்க் கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.நியூயோர்க் காவல்துறை ஆணையர் ரேமண்ட் கெல்லி இது குறித்துக் கூறுகையில், அவ்லகிக்கு ஏராளமான அனுதாபிகள் அமெரிக்காவில் குறிப்பாக நியூயோர்க் நகரில் இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் அவருடைய கொலையைத் தொடர்ந்து அவருடைய ஆதரவாளர்களால் பழிவாங்கல் நடவடிக்கைகள் இங்கே மேற்கொள்ளப்படலாம் என்றார்

# லிபியாவில் பெண் வேடமிட்ட செய்தித் தொடர்பாளர் கைது

லிபியாவில் அதிபர் கடாபியின் 42 ஆண்டு கால சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. அதை தொடர்ந்து தற்போது புரட்சியாளர்களின் இடைக்கால அரசு பதவி ஏற்றுள்ளது.

ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து கடாபியின் மனைவி, மகள் மற்றும் மகன்கள் குடும்பத்துடன் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுவிட்டனர். ஆனால் கடாபி மட்டும் லிபியாவை விட்டு செல்லாமல் தலைமறைவாகியுள்ளார்.

எனவே கடாபியையும், அவரது ஆதரவாளர்களையும் தேடும் பணியில் புரட்சிப்படை தீவிரமாக உள்ளது.

இந்த நிலையில் கடாபியின் முக்கிய செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் சிர்த் நகரின் புறநகர்ப் பகுதியில் மாறுவேடத்தில் சுற்றித் திரிவதாக புரட்சிப்படையினருக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அவரை தேடும் பணி நடந்தது. அவர் சிர்த் புறநகரில் காரில் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

அப்போது அவர் பெண் வேடம் அணிந்து இருந்தார். பர்தா அணிந்து இருந்த அவர் முகத்தை துணியால் மூடி இருந்தார். இந்தத் தகவலை மாற்று அரசின் கொமாண்டர் முஸ்தபா பின் டார்டெப் தெரிவித்தார். இன்னும் ஒருவாரத்திற்குள் கடாபியின் ஆதரவாளர்கள் அனைவரும் பிடிபடுவார்கள் என உறுதி அளித்தார். இதற்கிடையே மூசா இப்ராகிம் கைது செய்யப்பட்ட செய்தி லிபியாவில் இருந்து ஒளிபரப்பாகும் அல்-ஹீர்ரா மிஸ்ரதா டெலி விஷனில் புகைப் படத்துடன் வெளியானது.

# பதிவிறக்கப் பெட்டகம்

**கா**தல் – மனித வாழ்வின் நித்தியமான அறங்களில் ஒன்று. அது வரும்போது, அதைச் சாத்தி வைக்கும் கதவுகள் இதுகாறும் இல்லை. காதல்கள் அகப்பொருள் இலக்கணம் பழத்துவிட்டு வருவதில்லை. குளம் ஆறு கடல் சமதளம் எங்கும் பெய்துவிட்டுச் செல்லும் மழை அது. ஜூலியட்டுக்கு அது திடும் எனத் தோன்றும் மின்னல். அம்பிகாபதிக்கு நெருப்பு ['உருகி, உடல் கருகி, உள்ளீரல் பற்றி எரிவது அவியாது என் செய்வேன். வரி அரவ, நெஞ்சிலே தோய்த்த நளினவிழிப் பெண் பெருமாள், நெஞ்சிலே இட்ட நெருப்பு']. மஜ்னுவான கயஸுக்கு மரண தாகம். அது பிறப்புச் சான்றிதழ் பட்டதல்ல. வர்க்கமும் வயதும் சாராது வீசும் பொதுக்காற்று அது. காதலில் காதல்தான் இருக்கிறதே தவிர கள்ளக் காதல், வெள்ளைக் காதல் இல்லை. **– பிரபஞ்சன்**

**உ**லகம், இதுகாறும் சந்தித்த உயிர்க்கொலைகள், இதுகாறும் நடந்த யுத்தங்களால் நிகழவில்லை, இருபதாம் நூற்றாண்டின் இருபெரும் உலக யுத்தங்களாலும் கூட அது நிகழவில்லை. மாறாக, மனம் உடைந்த காதலர்களின் மரணமே எண்ணிக்கையில் மிக அதிகமானது. **– ஓஷோ**

**கா**தல் தரும் எல்லையற்ற கடுந்துயரம் எனக்குப் பிரியமானது. என் காதலைப் போன்றதுதான் மரணம் என்றால் நான் செத்துப் போகத் தயார். **– புஷ்கின்**

**கா**தல் குருடானது. கல்யாணம்தான் கண்களைத் திறந்து விடுகிறது. **– ஆங்கிலப் பழமொழி**

**அ**வளுடைய வேலை சும்மா உயிர்வாழ்ந்து கொண்டு அதேசமயம் அதனால் உலகத்தையே இன்னும் கொஞ்சம் அழகுபடுத்துவது. **– ஓ ஹென்றி**

**ஊ**ர்மக்கள் நீரெடுக்கும் குளத்திலுள்ள பாசி போன்றது பசலை. காதலன் தொடும்போதெல்லாம் விலகி, விடும்போதெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது.

**– பரணர் (குறுந்தொகை)**

**ம**றைத்து வைக்கப்பட்ட ரகசியச் சிறகுகளை மனிதர்களுக்கு வழங்குகிறது காதல். **– பிரபஞ்சன்**

**கா**தல் அல்லாதது எதுவும் என்னைத் திருப்தி செய்யாது. **– கீட்ஸ்**

**கா**தல்வயப்பட தேவைப்படுவதெல்லாம் கற்பனையைக் கட்டவிழ்த்துவிட வேண்டியதும் பொதுஅறிவைக் கட்டிப்போட்டு விட வேண்டியதும்தான். **– ஹென்றி ரோலண்ட்**

**எ**ன் கண்ணே நான் இன்னும் உன்னைக் காதலிக்க ஆரம்பிக்கவே இல்லை. அதற்குள் மறைந்துவிட்டாயே!

**– காதலியின் கல்லறை முன் சல்வடோர் டாலி**

**நீ** ஒன்றுமில்லை. எப்படி புரியவைப்பது இதை எனக்கு? **– ஆசை**

**இ**தன் நிழலில் நாம் இளைப்பாற வேண்டாம் கண்ணே! இங்கே ஒரு பணக்கார அரசன் ஏழைகளின் காதலை அவமதித்து இருக்கிறான். **– தாஜ்மகால் பற்றி யாரோ**

**யா**ருடனும் பேசத் தோன்றாமல் காகிதங்களை எடுத்து வைத்துக்கொண்டு உனக்கு இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். மொத்த மனித வர்க்கமே காதலையும் அன்பையும் புறக்கணித்துவிட்டு பேரழிவில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றுகிறது ஜெனீ. தேசங்களுக்கிடையே எல்லையும் இராணுவமும். மனிதர்களுக்கிடையே கண்ணுக்குப் புலப்படாத எண்ணற்ற தற்காப்புத் தந்திரங்களும் தாக்கும் உபாயங்களும்

அதிகாரமும் எதிர்பார்ப்புகளும் நிபந்தனைகளும் அற்ற எளிமையான இயல்பான அன்பும் மனித உறவுகளும் இன்று சாத்தியமே இல்லை என வாழ்க்கை எனக்குத் திரும்பத் திரும்ப நிரூபித்துக் கொண்டே இருந்தாலும் மனசு என்னவோ விக்ரமாதித்தனின் வேதாளம் மாதிரி திரும்பத் திரும்ப அன்பு அன்பு அன்பு என்றே உசாவுகிறது.

**– ஸீரோ டிகிரி நாவலில்**

**அ**ளவிலா அன்பை விட பைத்தியக்காரத்தனம் வேறொன்று உலகில் உண்டா? **– நித்ய சைதன்யா**


**பே**ரன்பு செய்தாரில் யாவரே பெருந்துயரம் பிழைத்து நின்றார்? **– பாரதி**

**ந**ரகம் என்றால் என்ன? அன்பு செலுத்த இயலாமல் போவதே நரகம். **– கரமஸோவ் சகோதரர்கள் நாவலில்**

**எ**ல்லா குற்றங்களும் அன்பின் வழியர்கக் களைந்து எறியப்பட்டு விட முடியும்.

**– குற்றமும் தண்டனையும் நாவலில்**

சுமனசிறீ லியனகே கட்டுரையிலிருந்து...




# பதிலும் கணக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சொல்லப்பட வேண்டும்

ஏகாதிபத்திய நாடுகளும் அவர்களால் நிதி வழங்கப்பட்டு வரும் குடியியல் சமூக அமைப்புகளும் ஆயுத மோதல்களின் கடைசிக் கட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் போர்க் குற்றங்களை விசாரிக்க ஒரு சர்வதேசப் பொறிமுறை கட்டமைக்கப்படவேண்டும் என்றே கோரிவருகின்றன.

25 ஏப்ரல் 2011ல் பகிரங்கப்படுத்தப்பட்ட தருஸ்மான் அறிக்கையும் மற்றவற்றிற்கிடையில் பரிந்துரைத்திருப்பது, உள்நாட்டு பொறுப்புக்கூறும் பணியையும் அதன் உடன் நிகழ்வுகளையும் கண்காணிப்பதற்கும், சுதந்திரமான விசாரணைகளை நடத்துவதற்கும் மற்றும் அதற்கு வழங்கப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கும் ஒரு சுதந்திரமான சர்வதேசப் பொறிமுறை நிறுவபபட வேண்டும் என்று. ஐநா மனித உரிமைகள் அமைப்பில் ஒரு சர்வதேச தொண்டர் நிறுவனக் குழுவினர் இந்த விடயத்தைப்பற்றி அரசியல் கலப்பற்ற விவாதம் ஒன்றிற்கு அழைப்பு விடுக்கின்றனர்.

இந்த அமைப்புகள் மனித உரிமைகள் என்று சொல்லப்படுபவவைகளை அரசியல் கலப்பற்ற விடயமாக கருதுவதிலிருந்தே இந்த அமைப்புகள் செயற்படும பகுப்பாய்வுக் கட்டமைப்பின் ஆழமற்ற தன்மையை விளங்கிக் கொள்ளலாம். அதை உண்மையில் அரசியல் கலப்பற்றதாகக் கருத முடியுமா? இல்லை.

இந்தப் பொறுப்புக்கூறும் கடப்பாடு பரவலாய் ஒரு இரண்டாவது கேள்வியையும் உள்ளடக்கியிருக்கிறது, பெயரளவில் பொறுப்புக் கூறவேண்டியது யாருக்கு? என்பதுதான் அந்தக் கேள்வி. அதற்கு தரப்படும் பதில் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு படையினர் பொறுப்புக் கூறவேண்டியது சர்வதேச சமூகம் என்றழைக்கப்படுபவர்களுக்கு. இந்த பொறுப்புக்கூறும் அதிகாரத்தை சட்டபூர்வமான ஒன்று என்று கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளுவதை விடுத்து அதன் தன்மைகளையும், இன்றிமையாத அதன் கூறுகளையும் பற்றி ஆராய்வது சுவாரஷ்யமான ஒன்றாக இருக்கும்.

இந்த சர்வதேச பொறுப்புக்கூறும் ஆட்சியானது மூன்று இன்றிமையாத கூறுகளைக் கொண்டுள்ளது. அவை,

1) ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் துணையான சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும்,

2) மேற்கத்தைய ஏகாதிபத்திய நாடுகளின் அரசாங்கங்களுக்கும் மற்றும்

3) அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும்

இது அரசியல் கலப்பற்ற பொறிமுறையா?

சில காலத்துக்கு முன்பு ஜேர்மனிய தத்துவவியலாளர் ஜர்கன் ஹபர்மஸ் ஒரு முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார், 'உலகளாவிய தன்மை கோருவது, வெறுமனே மேற்கத்திய மேலாதிக்கத்தினை மறைப்பதற்கு முக்கியமான ஒரு நுட்பமான ஏமாற்றும் தன்மையான கருவியாக நாங்கள் மனித உரிமைகள் என்பதை இணைத்துள்ளோமா?' இந்த அறிவிப்புக்கு கருத்து தெரிவிக்கையில் தாரிக் அலி தெரிவிததது, இதில் நுட்பமான என்கிற சொல்லை நீக்கிவிட வேண்டும் என்று. தற்போதைய உலகப் பின்னணியில் எவ்வாறு இந்தக் கருவி செயறபட முடியும்? என்று தாரிக் அலி கேட்டார்.

யுத்தம் என்பது உரிமையுள்ள நடவடிக்கை, அமெரிக்காவின் அனுமதியுடன் அல்லது அமெரிக்காவின் தெரிவின் படி அது பயன்படுத்தப்படும்போது அது சட்டபூர்வமான ஒரு கருவியாக மாறிவிடுகிறது. இந்த நாட்களில் அது மானிடத்தின் அவசியமாக வ்ழங்கப்படுகிறது. இந்த 21ம் நூற்றாண்டில் காலனித்துவம் அல்லது மேலாதிக்கம் என்பதுக்கு முக்கியமான தூண்போல நின்று அரசியல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உலகின் ஊடக வலையமைப்புகள் உதவிகளை வழங்குகின்றன.

சிறியவைகளான மூன்றாம் உலக நாடுகள் இந்த உலக அதிகாரக் கட்டமைப்புக்குள் இயங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன, அவைகள் உயிர்வாழவதற்காக சில நடைமுறைக்கேற்ற நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்துக்கும் தள்ளப்பட்டுள்ளன.

இதன் கருத்து பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்கு சட்டபூர்வமான விடயங்கள் எதுவும் இல்லை என்பதா? வெகு எளிமையான பாஷையில் இந்தக் கேள்வியை நாம் கேட்கலாம். இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்பு படைகளும் கடைசிக் கட்ட போரின்போது அல்லது அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதற்கு கணக்கு கூற வேண்டுமா?

இதற்கு எனது தெளிவான பதில் என்னவென்றால், அங்கு ஒரு கணக்கு கூறும் விடயம் இருக்கிறது. மற்றும் இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்பு படைகளும் என்ன நடந்தது என்பதற்கு பதில் கூறத்தான் வேண்டும். இருந்தபோதிலும் இயல்பாகவே, யாருக்கு கணக்கு சொல்ல வேண்டும் என்கிற ஒரு இரண்டாவது கேள்வியும் எழுகிறது. இந்த சட்டபூர்வமான பொறுப்புக்கூறும் கடப்பாடு ஒரு தார்மீகக் கடமையாக உள்ளபடியால் அதனை இராஜதந்திரம், மாயம், பிரமை, தவறான தகவல்கள், அப்பட்டமான பொய்கள், என்பனவற்றின் மூலம் கையாள முடியாது அது பிரபலமான இறையாண்மை மற்றும் சமூக நீதி என்பன சம்பந்தமான விடயம்.

பொறுப்புக்கூறும் கடப்பாடு என்பது ஒரு நீதியான விடயம் என்று நாங்கள சொல்லும்போது, இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்பு படைகளும் பொதுவில் போரின் கடைசிக் கட்டத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பதிலும் கணக்கும் சொல்ல வேண்டும், என்கிற பதில் கிடைக்கிறது. இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்பு படைகளும் தங்கள் ஒருமைப்பாட்டை பேணுவதுடன் நேர்மையாக உண்மைகளைச் சொல்லி தங்கள் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

போரின் கடைசிக் கட்டத்தில் நிகழ்ந்தவைகளைப் பற்றி ஆராய்வதற்காகவும் மற்றும் அங்கு வேண்டுமென்றே கொலை செய்தல் மற்றும் பொதுமக்களுக்கு தீங்கு விளைவித்தல் போன்ற எண்ணம் உருவாகியிருந்ததா? பொது மக்கள் தங்கியிருந்த இடங்களை பாதுகாப்பு படையினர் தாக்கினரா? என்பதைப் பற்றியும் விசாரணை செய்ய சுதந்திரமான ஆணைக்குழு ஒன்று எங்களுக்கு அவசியமாகிறது. இலங்கை அரசாங்கம் யுத்தத்தின்போது பொதுமக்களின் இழப்பு பூச்சியம் ஆகும்படியான கொள்கையை தான் பின்பற்றியதாகக் கூறிக்கொண்டாலும், பொதுமக்கள் பாதிக்கப்படுவது இயல்பாகவே நடந்திருக்கலாம் ஏனெனில் இந்த ஆயுத மோதலின் தன்மையானது மரபுவழி முறையாலும் மற்றும் மரபுவழியற்ற முறையாலும் கலவையாக்கி அமைக்கப்பட்டது.

உலகெங்கிலும் நடந்த மோதல்களின் தரவுகள் ஆயுத மோதல்களின்போது கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் தொகை மிக அதிகம் என்று வெளிப்படுத்துகின்றன. இப்படியான ஒரு நிலையில், ஆயுதப் போராட்டங்களின் தன்மையினால் அப்படியான சில நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தால் கூட இலங்கை அரசாங்கம் அதற்கு பொறுப்பாகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சம்பந்தனின் கலாநிதிப் பட்டம்!

முத்துக்குமார் கட்டுரையிலிருந்து

ஐ.நா மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தொடர், பிளேக்கின் வருகை என்பதைப்போல அரசு - கூடடமைப்பு பேச்சுவார்த்தை என்பதும் கடந்த வாரங்களில் முக்கியமான நிகழ்வாகும். முறிவடைந்த பேச்சுவார்த்தை மீளத் தொடங்கியமைக்கு பிளேக் வருகை ஐ.நா.மனித உரிமைக் கவுன்சிலின் கூட்டத்தொடர் என்பவற்றினால் சுருக்குக்கயிறு இறுகிவிடும் என்ற அச்சம்தான் காரணம்.

இந்தச் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை செயற்பாட்டிற்கு ஒரு சட்டகத்தை உருவாக்கி முன்னெடுத்திருக்கலாம். ஆனால் கூட்டமைப்பு அதை எதனையும் முன்னெடுக்கவில்லை.

மாறாக ஒவ்வொரு தடவையும் சர்வதேச ரீதியாக இலங்கை அரசிற்கு வன்மையான அழுத்தங்கள் வரும் போது அரசினைப் பாதுகாக்க கூட்டமைப்பு ஓடோடி வருவதுபோல இந்தத தடவையும் ஓடோடி வந்தது. பிளேக் அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு முன்னரே தாம் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் தயாராகி உள்ளோம் என சம்பந்தர் அவரிடம் கூறியிருந்தார். இந்தத் தடவை கூட்டமைப்பு பிளேக்கினைச் சந்தித்தபோது சம்பந்தனும், சுமந்திரனும் மட்டுமே சென்றனர். சுரேஸ் பிரேமச்சந்திரனும் கழட்டி விடப்பட்டிருந்தார். அரசாங்கத்திற்கு சார்பாக தாம் பேசுகின்ற கதைகள் வெளியில் கசிந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் இந்த முன்னேற்பாடு.

இன்னும் சிறிது நாட்களில் தமிழ் மக்களுக்கு கதை சொல்வதற்கு பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு கூட்டமைப்பு வெளியில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மக்களுக்கு ஒன்றும் சர்வதேசத்திற்கு ஒன்றும் கூறுவதில் கூட்டமைப்புக்கு நிகர் கூட்டமைப்புத்தான். சம்பந்தன் இது விடயத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பையே . முடித்திருக்கின்றார். சுமந்திரன் தான் அரசியலுக்கு புதிது என்பதால் மக்கள் மத்தியில் அடிக்கடி மாட்டிக் கொள்கின்றார். தமீழீழம் கேட்டு மாவட்ட அபிவிருத்திச் சபையைப் பெற்றவர்களுக்கு இது ஒன்றும் கடினமானதல்ல.

சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்கு சாதகமான நிலைவரும் போது கூட்டமைப்பு அதனைப் போட்டுடைப்பது தான் தமிழ்மக்களைப் பொறுத்தவரை மிகப்பெரிய சோகம்.

சர்வதேச ரீதியான அழுத்தங்கள் எதிர்கொள்வதற்கு அரசு பல்வேறு வியூகங்களை அமைத்து செயற்படுகின்றது. இந்நிலையில் வியூகங்களை உடைத்தெறியும் செயற்பாட்டில் கூட்டமைப்பு இறங்கியிருக்க வேண்டும். மாறாக போர்க்குற்றச்சாட்டுகளிலிருந்து அரசினைப் பாதுகாக்கும் முயற்சியிலே இறங்கியுள்ளது.

கூட்டமைப்பு இந்தியாவின் எடுபிடியாக இருக்கும்வரை இந்தப் பாதுகாகக்கும் பணியைத் தான் செய்யப்போகின்றது. தமிழ் மக்கள் கூட்டமைப்பைத் தெரிவு செய்தது தமிழ் மக்களினைப் பாதுகாப்பதற்காகவல்ல, அரசினைப் பாதுகாக்கத்தான் என்ற நிலை உருவாகிவிட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கைகளுக்கான எதிர்வினைகள் ஊடக மட்டத்தில் தீவிரமாக வெளிவரத் தொடங்கிவிட்டன. கிண்டலடித்து காட்டுன்களும் வெளிவந்துள்ளன.

அரசியல் மட்டத்தில் வலுவான எதிர்வினை கஜேந்திரகுமாரிடமிருந்தே வந்தது. போர்க்குற்றச்சாட்டிலிருந்து அரசினைப் பாதுகாப்பதற்காகவே கூட்டமைப்பு விதித்த நிபந்தனைகளையெல்லாம் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு சென்றது 'என அவர் நேரடியாகவே குற்றம் சாட்டியிருக்கின்றார்.



இந்நிலை வரும் என்பதற்காகவும், தாம் குத்துக்கரணம் அடிக்கும் போது தமிழ்த் தேசிய சக்திகளுக்கு வேறோர் தலைமை கிடைத்துவிடும் என்பதற்காகவுமே கஜேந்திரகுமாரை கூட்டமைபபுக்குள் இழுக்க இந்தியாவும் சம்பந்தன் தலைமையும் தீவிர முயற்சி செய்தது. ஆனால் கஜேந்திரகுமார் அதற்கு இடங்கொடுக்கவில்லை தற்போது ஊடகங்களும் அவருக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் கூட்டமைப்பு அவர் மீது நல்ல கடுப்பில் உள்ளது. ●-●

# சமூக சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வரவேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன. இதன் காரணமாக பல துர்நடத்தை வழக்குகளும் நீதிமனறில் விசாரணைக்கு வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பொலிஸாருக்கும் ஏனைய படையினருக்கும் ஆக்கபூர்வமாக உதவ கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வரவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடலுக்கான பொலிஸ் பொறுப்பதிகாரி ஆப்ரீன் கூறினார்.

கிளிநொச்சி நகர் கிராம அபிவிருத்தி சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்திற்கு கிராம அபிவிருத்திச் சங்க பிரதித் தலைவர் ஜனாப் தாயுதீன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி நகர் கிராம அலுவலர் சண்முகதாசன் மற்றும் கிளிநொச்சி இராணுவ அதிகாரி கப்டனகுமார, லெப்டினண்ட் கருணாரட்ண, கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி டாக்டர் க.திருலோகமூர்த்தி, முன்னாள் கிளிநொச்சி பனை அபிவிருத்திச் சபை இணைப்பதிகாரி ஏ.வி.கே. மாணிககம் ஆகியோர் கலந்துகொண்டனர.

அங்கு அவர் மேலும் பேசுகையில், இன்று கிளிநொச்சி மாவடடம் சமூக ஒழுக்கச் சீர்கேடு நிறைந்த மாவட்டமாக மாறிவருகினறது. 27 பாலியல் துர்நடத்தை வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் விசாரணையில் உள்ளன.

ஆறு வயது சிறுமி 13 வயது சிறுமிகள் தந்தையால் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் போன்ற துர்நடத்தை சம்பவங்கள் அதிகத்துச் செல்கின்றன.

இது மட்டுமல்ல பெண்களும் ஆண்களும் வயது வேறுபாடு இன்றி கசிப்பு உற்பத்தி செய்து விற்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நீதிமன்றில் இவ்வாறான வழக்குகள் அடிக்கடி விசாரணைக்கு வருகின்றன. கசிப்பு விற்ற பெண் முதலில் தண்டனை பெற்று மீண்டும் வந்து பின்னரும் இதே கசிப்புக் காச்சி விற்கும் தொழிலை மேற்கொண்டபோது அவருக்கு கிளிநொச்சி நீதிமன்றில் அதிகபட்ச சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இவ்வாறான ஒழுக்கக்கேடான சம்பவங்கள் எமது சமூகத்தில் இடம பெறவேண்டுமா? இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டாமா என அககறையுள்ள சமுதாய முன்னோடிகளான கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளை கேட்கிறேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் விழிப்புடன் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் செயற்பட்டு பொலிஸாருக்கும் ஏனைய படையினருககும் ஆக்கபூர்வமாக ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

# புதிய பிரமாணங்களிற்கு ஆசிரிய சேவை சங்கம் எதிர்ப்பு

அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள புதிய் ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பு ஆசிரியர் சங்கங்களின் கருத்தை பெறாமலேயே அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெற்றுள்ளதாகவும் புதிய ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்புக்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர் சங்கங்களின் கருத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளமை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கம் முன்வைக்கவுள்ள புதிய ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பு பிரச்சினைகள் பல ஏற்படும் என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# சேவா லங்கா நிறுவனத்தால் பாடசாலைகளுக்கு கிணறுகள்

(கொக்கிளாய்)

கொக்கிளாய் அ.த.க.பாடசாலையின் பாவனைக்கு என நிரந்தரக் கிணறு ஒன்றினை சேவாலங்கா நிறுவனம் அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. கொக்கிளாய் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் அப்பாடசாலையின் கிணறு இடிபாடுகளுக்குள் சிக்கி முற்றாக மூடப்பட்டுக் காணப்பட்டது.

இந்த நிலையில் தண்ணீரைப் பெறுவதில் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு சேவாலங்கா நிறுவனம் கொக்கிளாய் பாடசாலைக்கு என கிணறு ஒன்றினை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளதுடன் அதறகான பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

கொக்கிளாய் கிராமத்திற்கு என ஏற்கனவே பதினொரு கிணறுகளை அமைத்துக் கொடுத்ததுடன் சேவாலங்கா நிறுவனம் பன்னிரண்டாவது கிணறாக கொக்கிளாய் பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கும் கிணறு உள்ளதாகச் சேவாலங்கா நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார். (17)

# யுத்த வெற்றியை உதாசீனம் செய்வோர் பொருளாதாரத்தை சீர்குலைக்கவும் சதி

## அமைச்சர் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(அம்பாறை)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஈட்டிய யுத்த வெற்றியை உதாசீனம் செய்பவர்ககள் நாட்டின் பொருளாதாரத்தையும் சீர்குலைக்க முயற்சிக்கின்றனரென வீடமைப்பு நிர்மாணம் மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தை வென்றபோதிலும் நாட்டை அபிவிருத்தி செய்யும் இயலுமை அரசாங்கத்திற்குக் கிடையாது என சிலர் செய்துவரும் பிரச்சாரங்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அரசியல் ஸ்திரத் தன்மையை உத்தரவாதம் செய்யாது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்த எதிர்க்கட்சியினர் அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

### மின்சாரக் ...

வழங்கினர். இதன்போது குறித்த ஒரு தூணை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டவேளை தூணிற்குத் தோண்டப்பட்ட கிடங்கு போதுமானதாக இல்லாத நிலையில் அது சரிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது அப்பகுதியில் உதவி செய்துகொண்டிருந்த அவ்வூர் இளைஞனின் நெஞ்சுப் பகுதியில் தூண் விழுந்ததனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த மின்சாரசபை ஊழியர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டைப் பொலிஸார் மின்சார சபை ஊழியர்கள் தம்மிடம் சரணடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### பொதுநலவாய...

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் அரசியல் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்தும் தீர்மானம் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டின்போது மேற்கொள்ளப்பட்டது. அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இவ்விவகாரம் இடம்பெறவில்லை என அவர் பதிலளித்தார்.

இதேவேளை, பொதுநலவாய அமைப்பின் மறுசீரமைப்பு, ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தற்போதைய உலக பொருளாதார நெருக்கடியின் தாக்கம் ஆகியன உட்பட பல விவகாரங்கள் அவுஸ்ரேலிய பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் உள்ளதாக பொதுநலவாய உதவிச் செயலாளர் ஸ்டீவ் கட்ஸ் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டின் உயரதிகாரிகள் மட்ட மாநாடு இம்மாதம் 24, 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதேபோன்று பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்ட மாநாடு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளிலும், அரசியல் தலைவர்களின் உச்சி மாநாடு எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பயனாளிகள்...

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நிகழ்ந்த இந்த நிகழ்வில் இந்திய வீட்டுத்திட்டம், கியூடெக் - ஹரிதாஸ் வீட்டுத்திட்டம், ஐ.ஓ.எம். வீட்டுத்திட்டம், நியாப் வீட்டுத் திட்டம், உலக வங்கி வீட்டுத்திட்டம் என்பவற்றின் அதிகாரிகள் பங்கு பற்றினர். இந்த மாநாட்டில் குறித்த அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தடைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் கியூடெக் - ஹரிதாஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்திய வீட்டுத்திட்டத்தின் முதற்கட்டமாக நிர்மாணிக்கப்பட்டுவரும் 150 வீடுகளும் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் எனவும் உறுதி தெரிவிக்கப்பட்டது. (பா)

### புலிகளின்...

மருந்துப் பொருட்களையும், அத்தியாவசிய பொருட்களையும் விநியோகிக்கும் பொறுப்பு பசில் ராஜபக்ஷவிடமே இருந்தது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையின் மூலம் இதுவரை காலமும் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டு வந்த நிலைமாறி தற்போது அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பெயரும் அதில் உள்ளடக்கப் படககூடிய சூழல் ஏற்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதிய பாலம்



யாழ்ப்பாணம் வேம்படி வீதியிலுள்ள உடைந்த பாலம் மாநகர சபையினரால் அகற்றப்பட்டு புதிய பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. சுமார் ஆறுமாதங்களாக உடைந்திருந்த இந்தப் பாலம் இதுவரை தற்காலிகமாக சீரமைக்கப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பாலம் முற்றாக உடைத்தகற்றப்பட்டு முன்னர் இருந்ததைவிட சற்றுப் பெரியதாகப் புதிய பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால் கடந்த சில தினங்களாக இந்த வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் பெரியதாக அமைக்கப்படுவதால் மழைநீர் தேங்காது இலகுவாக வழிந்தோட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (54)

## செய்திப்பாணம்

**சம்பந்தன், மாவையார், சரவணபவன், சங்கரியார்**
**இம்மாத்தி ரமாசுரேஷ், அடைக்கலத்தார் - சும்மாவா**
**இப்படையே தோற்கின் எப்படையாம் வெல்லுமென்**
**குப்புறப் படுகுலம் கோடி!**



# யாழ்.செல்லும் தனியார் பேருந்துகள்
# வெள்ளவத்தையிலிருந்து புறப்பட அனுமதி

(கொழும்பு)


யாழ்ப்பாணத்துக்கான தனியார் பேருந்து சேவைகள் எதிர்வரும் ஏழாம் திகதி முதல் வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிசனுக்கு அருகில் உள்ள அரச காணியில் இருந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பிரகாரம் கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்கள், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமநாதன் அங்கஜன், வெள்ளவத்தைப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்ட கூட்டம் சுமார் இரண்டு மணித்தியாலமாக இடம்பெற்றது.

கடந்த சில மாதங்களாக இழுபறி நிலையில் காணப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் பேருந்து சேவை நேற்று இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் சுமூகமாக இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த பிரதேசத்தில் இருந்து மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை பேருந்துகள் யாழ்ப்பாணத்துக்கு செல்லும் பயணிகளை ஏற்ற முடியும் என பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க உறுதியளித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு செல்லும் பேருந்துகள் பயணிகளை வெள்ளவத்தையில் இறக்கிய பின்னர் இரத்மலானை இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வெற்றுக் காணியில் பேருந்துகளை நிறுத்த முடியும் எனவும் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இரத்மலானை இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வெற்றுக் காணியில் பேருந்துகளை நிறுத்த விரும்பாத பேருந்து உரிமையாளர்கள் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி போன்ற இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் நிறுத்தமுடியும் என கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வீதி அனுமதிப்பத்திரம் பெறாத பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாது என பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# தொம்பே கைதி மரணம் ஐந்து பொலிஸார் கைது

(கொழும்பு)

தொம்பே பிரதேசத்தில் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பொலிஸார் நடத்திய தாக்குதலினால் குறித்த கைதி உயிரிழந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்ததுடன், அவர்களுக்கும்

பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் பிரதி பொலிஸ் பரிசோதகர், சார்ஜன்ட் மற்றும் மூன்று கொன்ஸ்டபிள்கள் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொம்பே பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

# ஜனநாயகத்தை நிலைநாட்ட ஐ.தே.க. வலுவாக வேண்டும்

## கூறுகிறார் எரான் விக்ரமரட்ன எம்.பி.

(கொழும்பு)

ஒரே கட்சியை பலப்படுத்துவது ஆபத்தாக அமையக் கூடும் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சிகளையும் வலுப்படுத்த வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் முக்கியமான சில உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையேனும் எதிர்க்கட்சிகளிடம் வழங்க வேண்டும்.

பல கட்சிகளின் பிரதிநிதித்துவத்தினால் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும் ஜனாதிபதி, நாடாளுமன்றம் மற்றும் அநேகமான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது. நபர்களை கவனத்திற் கொள்ளாது கட்சியைக் கருத்திற் கொண்டு வாக்களிக்க வேண்டும் மென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# அசாதாரண நிலையைக் கட்டுப்படுத்த தயார் நிலையில் இராணுவம்



நாட்டில் அசாதாரண நிலைமைகள் ஏற்படும் போது அதனைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் முடியாவிட்டால் இராணுவத்தினர் தலையிட்டு நீதியையும் சமாதானத்தையும் தோற்றுவித்து நாட்டின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்துவர் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இதற்காக இராணுவத்தினர் எந்த வேளையும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அனுராத புரத்தில் இடம்பெற்றவேளை அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கண்ணி வெடியகற்றும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.


# தமிழர்களுக்கு உரிமைகள் வழங்க தெரிவுக்குழு உருவாக்கம் அவசியம்

(கொழும்பு)

அரச செயற்பாட்டு நிபந்தனை பிரேரணைக்கு ஊடாக தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும், பிரேரணையை செயற்படுத்துவது தொடர்பில் தெரிவுக்குழு சபையொன்று உருவாக்கப்படுவது அவசியம் என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வெகு விரைவிலேயே தெரிவுக்குழு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இன ரீதியிலான குழப்பங்களை தீர்ப்பதற்காக நாடாளுமன்ற தெரிவிக்குழு ஒக்டோபர் மாதத்தில் தாபிக்கப்பட தீர்மா



னிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இத்தெரிவுக் குழுவின் பிரதான தரப்பினராக இருக்க வேண்டும்.

நாடாளுமன்றம் மீண்டும் கூடும் போது இத் தெரிவுக் குழு தொடர்பில் கலந்துரையாடப்படும் என்பதோடு அதனது செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினரோடு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் இடைநிறுத்தப்பட்ட போதும் தற்போது மீண்டும் இக் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# வடமராட்சியில் குற்றச் செயல்களை ஒழிக்க மக்களின் ஒத்துழைப்பு கோரும் பொலிஸார்

(வடமராட்சி)

குற்றச்செயல்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் அதுதொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்கள் துணை புரிய வேண்டுமென வடமராட்சி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.ஜி சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லியடிப்பொலிஸாரினால் கடந்த 28 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் கரணவாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மேலும் அவர் தெரிவித்தாவது, நாட்டில் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்தவண்ண முள்ளது. அவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழிக்கும் நோக்குடனேயே இக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் வாரத்திற்கொரு தடவையாவது ஒன்றுகூடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இக்குழுக்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட பொலிசாரில் ஏதாவது தவறுகள் இருப்பினும் அவற்றையும் சுட்டிக்காட்ட தயங்கவேண்டாமெனவும், அப்போதுதான் சமூகத்தில் உள்ள சிக்கல்களை இலகுவில் தீர்க்க வழிகோலும் எனவும் தெரிவித்தார்.

# சிறுவர், முதியோர் தினம் சிறப்பாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரப் பரிசோதகர், குடும்ப நல உதவியாளர், கிராம சேவகர், பொதுமக்கள் இணைந்து நடத்திய சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தின கௌரவிப்பு நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி எம். மரியதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ் மாநகரசபை முதலவர் யோகேஸ்வரி பற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ் மாநகரசபை ஆணையாளர் மூ.செ. சரவணபவ, மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், யாழ் தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவகணேசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து முதியோர்கள் மற்றும் சிறுவர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

# மனநிலை பாதிப்பிற்கு ஆளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகம்

சிறுவர்கள் மனநல பாதிப்புகளுக்கு இலக்காகும் தன்மை அதிகரித்துச் சென்றுள்ளதாக அங்கொடை தேசிய மனநல சுகாதார ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

குடும்பத் தகராறுகள் கல்வி மற்றும் சமூக பிரச்சினைகளே இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளதென அந்த நிறுவனத்தின் பணிப்பாளரும், விசேட மனநல வைத்திய நிபுணருமான ஜயன் மெண்டிஸ் தெரிவித்தார்.

பிள்ளைகளிடையே மன அழுத்தம் பரந்தளவில் காணப்படுதாகவும் விசேட மனநல வைத்திய நிபுணர் குறிப்பிட்டார். பிள்ளைகளுக்கு சிறந்த இளம் பராயமும், பெற்றோரின் உரிய பராமரிப்பும் பிள்ளைகளின் மன அழுத்தங்களை இனங்கண்டு அவற்றுக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதும் அவசியமான ஒரு விடயமாகும்.

அத்துடன், இளம்வயதிலேயே பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற மனநல பாதிப்புகளை அடையாளம் காண்பது மிக முக்கியமானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுகின்றமையே கடந்த காலங்களில் சிறுவர்கள் எதிர்நோக்கிய பாரதூரமான பிரச்சினைகளில் ஒன்றாக விளங்கியது என சிறுவர் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பிள்ளைகள் கடந்த வருடம் சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடியுள்ளனர் என சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான டொக்டர் ரத்ன சிறி ஏ.ஹேவகே கூறினார்.

அத்துடன், தற்போது காத்துக் கொள்ளக்கூடிய வீதி விபத்துக்களுக்கு இலக்காகின்றமை கடந்த காலப்பகுதியில் சிறுவர்கள் எதிர் நோக்கிய மற்றுமொரு பிரச்சினையாகும் எனவும் அவர் தெரிவித்தார்

# இலங்கை மீனவர்கள் பத்து பேர் கடற்படையினரிடம் ஒப்படைப்பு

இந்தியாவில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையான இலங்கை மீனவர்கள் 10 பேரையும் அவர்களுடைய இரண்டு படகுகளையும் இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் நேற்று மாலை இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காங்கேசன்துறை வடக்கேயுள்ள கடற்பரப்பில் வைத்து குறித்த மீனவர்கள் இந்திய கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் கடற்படையினரிடம் ஒப்பண்டைத்ததாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

இந்திய அதிகாரிகளால் விடுதலை செய்யப்பட்ட மேலும் 35 இலங்கை மீனவர்கள் இன்று தம்மிடம் ஒப்படைக்கவுள்ள தாகவும் கடற்படைபேச்சாளர் தெரிவித்தார்.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மேலும் 41 இலங்கை மீனவர்கள் அங்கு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.